
ISSN 1888-1246

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

விழி : 02 ஏப்ரல் 2006 பார்வை : 20 விலை : ரூபா.25.00



உள்ளே....


சோ. சந்திரசேகரம் ■ இலங்கையில் பாடசாலைக் கல்வியின் சில பிரதான அம்சங்களும் கல்வியின் உயர்நிலை நோக்குகளும்

அனுஷ்யா சத்தியசீலன ■ எமது கல்வியின் இன்றைய கடப்பாடு

கே.ஞானரெத்தினம் ■ ஆசிரியம் : ஒரு பன்முகப் பார்வை


ஏ.சி.ஜோர்ஜ் ■ புதிய கலைத்திட்ட சீராக்கம் - 2007

த.கலாமணி ■ மாற்றம் காணும் உலகுடன் இணைதல்: கல்வியற் கண்ணோட்டம் ஒன்றுக்கான அறிமுகம்

சபா. ஜெயராசா ■ மனவெழுச்சி நுண்மதியும் மனவெழுச்சி சார்ந்த எழுத்தறிவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கல்வியியல் நூல் வரிசையில் புதிய
வரவாக வெளிவந்துவிட்டது!




குழந்தை உளவியலும்
கல்வியும்

பேராசிரியர், கலாநிதி
சபா. ஜெயராசா

பக்கம் : 179
விலை : ரூபா. 350/=

POOBALASINGHAM
BOOK DEPOT

# பூபாலசிங்கம் புத்தகசாலை

புத்தக விற்பனையாளர்கள், ஏற்றுமதி,
இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்

தலைமை :
இல. 340,202 செட்டியார் தெரு.
கொழும்பு 11. இலங்கை.
தொ. பே. : 2422321
தொ. நகல் : 2337313
மின்னஞ்சல் : pbdho@sltnet.lk

கிளை :
இல. 309 A-2/3, காலி வீதி.
கொழும்பு 06. இலங்கை.
தொ. பே. : 2504266
தொ. நகல் : 4-515775

இல. 4 A, ஆஸ்பத்திரி வீதி.
பஸ் நிலையம். யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1888-1246

# அகவிழி

மாத இதழ்

**ஆசிரியர்:**
தெ.மதுசூதனன்

**ஆசிரியர் குழு :**
சாந்தி சச்சிதானந்தம்
ச. பாஸ்கரன்
காசுபதி நடராஜா

**நிர்வாக ஆசிரியர்:**
மனோ இராஜசிங்கம்

**ஆலோசகர் குழு :**
பேரா.கா.சிவத்தம்பி
(தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பேரா.சபா.ஜெயராசா
(கல்வித்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பேரா.சோ.சந்திரசேகரன்
(கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ஹுசைன் இஸ்மாயில்
(துணைவேந்தர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)
மா.சின்னத்தம்பி
(தலைவர், கல்வித்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ப.கா.பக்கீர் ஜஃபார்
(கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)
கலாநிதி மா.கருணாநிதி
(கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)
மா.செல்வராஜா
(கல்விப் பிரிவு, கிழக்குப் பல்கலைக்கழகம்)
தை.தனராஜ்
(நிபுணத்துவ ஆலோசகர், தொலைக்கல்வி நவீனமாக்கற் செயற்றிட்டம் (DEMP/DEPP), கல்வி அமைச்சு)
உ.நவரட்ணம்
(பணிப்பாளர், தமிழ்த்துறை, தேசிய கல்வி நிறுவகம்)

**அச்சு :**
ரெக்னோ பிரிண்ட், கொழும்பு - 06
தொலைபேசி: 0777-301920

**வெளியீடு மற்றும் தொடர்புகட்கு :**
**AHAVILI**
3, Torrington Avenue, Colombo - 07.
Tel : 011-2506272
E-mail : ahavili@viluthu.org

## ஆசிரியரிடமிருந்து...

ஆசிரியர்கள் பாடசாலைகளில் அறிவையும் திறன்களையும் உளப்பாங்கையும் நம்பிக்கையையும் விருத்தி செய்வதில் முதன்மையான பங்கு வகிக்கிறார்கள். அத்துடன் சமூகம் நோக்கி மாணவர் உளப்பாங்கினை மாற்றியமைப்பதிலும் ஆசிரியர்கள் முழுமையாக ஈடுபட வேண்டும்.

எம்மைப் போன்ற சமூகச் சூழலில் ஆசிரியர் பணி, சமூகத்தில் மாணவர் சிறந்த நற்பிரஜையாக வாழ்வதற்கான தகுதிப்பாட்டை வழங்கும் வலுப்படுத்துனராகவும் பங்காற்ற வேண்டியுள்ளது. அன்று முதல் இன்றுவரை ஆசிரியர் கல்வி என்பது இந்தப் பண்பின் அடியாகவே நோக்கப்படுகிறது.

இன்று ஆசிரியர் கல்வி பற்றியும் ஆசிரியர்களின் வாண்மை விருத்தி பற்றியும் அதிகளவு கவனம் செலுத்தப்படுகிறது. குறிப்பாக பூகோள ரீதியான மாற்றங்களும் கல்வியின் பயன்பாடுகளும் கல்வியின் தர முன்னேற்றத்துக்காகவும் ஆசிரியர்களின் வாண்மை விருத்தி செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன.

இந்த எதிர்பார்ப்புகள் ஒருபுறமிருக்க நடைமுறையில் ஆசிரியர்களின் பணி முழுமை அடையாத குறைப்பிரசவப் பின்புலத்தில் தான் இயக்கம் கொண்டுள்ளது. இதனாலேயே அவ்வப் பொழுது ஆசிரிய வாண்மை விருத்திக்கான செயற்பாடுகள் பலவற்றை கல்வியியல் ஆய்வாளர்கள் முன்வைத்து வருகின்றனர். ஆனால் அவை கொள்கைகளாக ஆலோசனைகளாக மட்டுமே உள்ளன.

தொடருறு ஆசிரியர் கல்வியின் அடைவு மட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லவும் பண்பு மாற்றவும் காணவும் உரிய நிலைமைகள் செயன்முறைகள் அறவே இல்லாதிருப்பதை நாம் சுட்டிக் காட்டத்தான் வேண்டும். ஆதலால் ஆசிரியர்களின் வாண்மை விருத்தி, ஆசிரியர் கல்வி யாவற்றிலும் நாம் உடனடியாக செய்யவேண்டியவை குறித்து ஆழமாகச் சிந்திக்க வேண்டும். அவற்றை உடனடியாக நடைமுறைச் செயல்வாதமாக மாற்றியமைக்க வேண்டும். இதனைக் குறிக்கோளாகக் கொண்டு நாம் கல்விச் சூழலில் புரட்சிகரத் தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டும். அப்பொழுது தான் கல்வியில் மாற்றங்களைக் கொண்டு வரமுடியும். ஆசிரியர்களின் பணியும் துலக்கமுறும். ❑

அகவிழியில் இடம் பெறும் கட்டுரைகளுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பு.
கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்கள் 'அகவிழி' யின் கருத்துக்கள் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பாடசாலைக் கல்வியின் சில பிரதான அம்சங்களும் கல்வியின் உயர்நிலை நோக்குகளும்

**கல்வியை நவீனமயப்படுத்தும் செயற்பாட்டில் பாடசாலைக் கல்வியில் சமய நிறுவனங்களின் செல்வாக்கு படிப்படியாகக் குறைக்கப்பட்டது. நீண்ட காலப் போராட்டத்தின் பின்னர் ஒரு சமயத்தை அச்சமயம் சாராத பிள்ளைகளுக்குக் கற்பிப்பதைத் தடுக்கும் 'மனச்சான்று வாசகம்' இலங்கை அரசால் நிறைவேற்றப்பட்டது. 1961ம் ஆண்டுச் சட்டப்படி அரசாங்க உதவியைப் பெற்று வந்த சமய நிறுவனங்களின் பாடசாலைகள் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டன. சமயபாடம் தவிர்ந்த ஏனைய பாடங்கள் யாவும் உலகியல் அறிவை உள்ளடக்கமாகக் கொண்டவை.**

பேரா. சோ. சந்திரசேகரம்
கல்வியியல் துறை
கொழும்புப் பல்கலைக்கழகம்

இலங்கையில் தற்போது இயங்கி வரும் 9700 பாடசாலைகளைக் கொண்ட பாடசாலை முறையில் காணப்படும் சில அம்சங்கள் பற்றிப் பல கல்வியியலாளர்கள் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்துள்ளனர். பிரதானமாக அரசாங்கப் பாடசாலைகளின் பகுப்பு அல்லது வகைப்பாடு பகுத்தறிவு அடிப்படையிலும் தர்க்க ரீதியாகவும் மேற்கொள்ளப்படவில்லை என்ற அவர்களுடைய கருத்து ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதாகும். சர்வதேசப் பாடசாலைகள், தனியார் பாடசாலைகள், அரசாங்கப் பாடசாலைகள் என்பது ஒரு வகையான வகைப்பாடு, 1AB,1C, 2,3 ஆம் வகைப் பாடசாலைகள் என்பது மற்றொரு வகைப்பாடு. இவற்றை விட தமிழ், சிங்கள, முஸ்லிம் பாடசாலைகள் என்றொரு வகைப்பாடும் உண்டு. மேலும் சில பாடசாலைகள் மகாவித்தியாலங்கள், மத்திய மகாவித்தியாலயங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. பாடசாலைகள் பற்றிய இக்குறிப்பின்படி, இலங்கையில் உள்ள பாடசாலைகள் ஒரு அடிப்படையான தத்துவத்தின்படியோ அல்லது ஒரு கொள்கையின் அடிப்படையிலோ வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது தெளிவாகும்.

மற்றொரு உதாரணம் தேசியப்பாடசாலைகள். இவை மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் வருவன. ஆரம்ப காலத்தில் வகுக்கப்பட்ட நியதிகளின்படி 1AB வகைப் பாடசாலைகள் மட்டுமே தேசியப் பாடசாலைகளாக வருவதற்குரிய தகுதிகளைப் பெற்றிருந்தன. ஆனால் சில 1C வகைப் பாடசாலைகளும் அரசியல் நிர்ப்பந்தம் காரணமாகத் தேசிய பாடசாலைகள் என்ற அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன. மேலும் நாட்டில் உள்ள 500க்கும் மேற்பட்ட 1AB பாடசாலைகள் அனைத்தும் தேசிய பாடசாலைகள் என்ற அந்தஸ்தைப் பெறவில்லை. அவற்றில் பல இன்னும் மாகாண சபைகளின் கட்டுப்பாட்டின் கீழேயே உள்ளன.

போதனா மொழி அடிப்படையில் பாடசாலைகள் சிங்கள மொழி மூலப் பாடசாலைகள், தமிழ் மொழிப் பாடசாலைகள் என்று வகுக்கப்பட்ட போதிலும் சில பாடசாலைகளில் சிங்கள மொழிப் பிரிவும் தமிழ் மொழிப் பிரிவும் காணப்படுகின்றன. அதே வேளையில் இன அடிப்படையில் சிங்களப் பாடசாலைகள், தமிழ்ப்பாடசாலைகள், முஸ்லிம் பாடசாலைகள் என்ற முறையிலும் பாடசாலைகளை வகைப்படுத்தப்பட முடியும். மேலும் பாடசாலைகள் பல மத அடிப்படையிலான அடையாளங்களையும் பெயர்களையும் கொண்டு விளங்குகின்றன; சமயப் பெயர்கள் பாடசாலைகளின் பெயர்களுடன் இணைக்கப்பட்டும் அல்லது ஒரு சமயத்துக்குரிய பெரியார்கள், சமயத்துக்குரிய புனித தலங்களின் பெயர்கள் (லும்பினி, நாலந்த) என்பவற்றைக் கொண்டும் பல பாடசாலைகள் விளங்குகின்றன. ஆனால் அதிகார பூர்வமாக இவ்வகையான சமய அடிப்படையிலான வகைப்பாடு இல்லாவிட்டாலும், பெரும்பாலான மாணவர்களின் சமயத்தைச் சார்ந்தவரே அதிபராக இருத்தல் வேண்டும் என்ற ஒரு ஏற்பாடும் உண்டு.

கல்வியை நவீனமயப்படுத்தும் செயற்பாட்டில் பாடசாலைக் கல்வியில் சமய நிறுவனங்களின் செல்வாக்கு படிப்படியாகக் குறைக்கப்பட்டது. நீண்ட காலப் போராட்டத்தின் பின்னர் ஒரு சமயத்தை அச்சமயம் சாராத பிள்ளைகளுக்குக் கற்பிப்பதைத் தடுக்கும் 'மனச்சான்று வாசகம்' இலங்கை அரசால் நிறைவேற்றப்பட்டது 1961ம் ஆண்டுச் சட்டப்படி அரசாங்க உதவியைப் பெற்று வந்த சமய நிறுவனங்களின் பாடசாலைகள்அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டன. சமயபாடம் தவிர்ந்த ஏனைய பாடங்கள் யாவும் உலகியல் அறிவை உள்ளடக்கமாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவை. உயிரியல் பாடத்தில் வரும் பரிணாமக் கோட்பாட்டைக் கற்பிக்க சமய ரீதியான எதிர்ப்பு எதுவும் காட்டப்படுவதில்லை. ஆனால் பொருளாதாரத்தில் மிக முன்னேறிய நாடான ஐக்கிய அமெரிக்காவில் கூட பல பாடசாலைகளில் இக்கோட்பாட்டைக் கற்பிப்பதில் தயக்கம் காட்டப்படுகின்றது. உயிரியல் ஆசிரியர்கள் சிலர் பாடசாலை நிர்வாகத்தினருக்கு அஞ்சி இவ்விடயத்தைத் தவிர்த்து விடுகின்றனர்; சில பாடசாலைகளில் மனிதனின் தோற்றம் பற்றிய சமயக் கருத்துடன் இக்கோட்பாடும் சேர்த்துக் கற்பிக்கப்படுகின்றது.

இலங்கையில் ஒரு புறம் சமயச் சார்பற்ற தன்மை நிலை நாட்டப்பட்டு வந்தாலும் பல பாடசாலைகள் தமது சமய தனித்துவ அடையாளத்தைப் பேணுவதில் அக்கறை செலுத்துகின்றன. இலங்கையில் அதற்கான சட்ட ரீதியான தடை எதுவுமில்லை. சில பாடசாலைகளில் சகல இனமாணவர்களும் பயிலுகின்றார்கள். பல்வேறு மதங்களைச் சார்ந்த மாணவர்களுக்கு அவரவர் சமயம் கற்பிக்கப்படவும் ஏற்பாடுகள் உண்டு.

## குடியேற்ற ஆட்சிக்காலப் பாடசாலை ஏற்பாடுகள்

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலேயே இவ்வகையான வேறுபடுத்தப்பட்ட, ஒரு சீர்த்தன்மையற்ற பாடசாலை முறை உருவாவதற்கான அடித்தளம் இடப்பட்டது. கோல்புறூக் குழுவினரின் (1831) கல்விச் சீர்திருத்தங்கள் காரணமாக நாட்டில் ஆங்கிலப்பாடசாலை முறையொன்று தோன்றியது. ஆங்கிலம் கற்ற அரச ஊழியர்களின் தேவையை நிறைவு செய்ய இப் பாடசாலை முறை உதவியது. மோர்கன் குழுவினர் (1867) இந்நாட்டில் வாழும் சாதாரண மக்கள் விவேகத்துடன் வாழ்க்கையை நடத்துவதற்கான அறிவை சுயமொழிப் மூலமான ஆரம்பக்கல்வி மூலமே வழங்க முடியும் என்று கருதி சுயமொழிப் பாடசாலைகளின் (தமிழ், சிங்கள) வளர்ச்சிக்குத் தேவையான பரிந்துரைகளை வழங்கினார். இதனால் 19ஆம் நூற்றாண்டிலேயே மொழி அடிப்படையில் வேறுபடுத்தப்பட்ட பாடசாலை முறையொன்று தோற்றம் பெற்றது..

ஆங்கிலப் பாடசாலைகள், சுயமொழிப் பாடசாலைகள் (தமிழ், சிங்கள மொழிப்பாடசாலைகள்) என்பவற்றோடு சிறு தொகையான இரு மொழிப்பாடசாலைகளும் (ஆங்கிலத்துடன் ஒரு சுயமொழி) அக்காலத்தில் இயங்கி வந்தன.

இவ்வாறு மொழி அடிப்படையில் மட்டுமன்றி சமய ரீதியாகவும் பாடசாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. போர்த்துக்கேயர் காலக் கத்தோலிக்கப் பாடசாலை மரபு, ஒல்லாந்தர், பிரித்தானியர் கால புரட்டஸ்தாந்த சமயப் பாடசாலை மரபு, 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பௌத்த பிரமஞான இயக்கம், ஆறுமுகநாவலர், பின்னர் சுவாமி விபுலானந்தர், சித்தி லெப்பை போன்றோர் தோற்றுவித்த பௌத்த, இந்து, இஸ்லாமிய பாடசாலைகள்.

**அட்டவணை 1**

**மொழிவகைப்படி இலங்கைப் பாடசாலைகள் (1939)**

| | 1939 | % |
|---|---|---|
| 1. ஆங்கிலப் பாடசாலைகள் | 336 (80,000) | 6.5% |
| 2. இருமொழிப் பாடசாலைகள் | 74 (18,000) | 1.5% |
| 3. சுயமொழிப் பாடசாலைகள் | 4701 (740.000) | 92% |

மேற்கண்ட அட்டவணை1ல் அடைப்புக்குறிக்குள் சேர்ந்து பயின்ற மாணவர் தொகை தரப்பட்டுள்ளது. ஆங்கிலேயர் காலத்தில் பாடசாலை மாணவர்களில் பெரும்பாலானவர்கள் சுயமொழிகளிலேயே கல்வி பயின்றமை குறிப்பிடத்தக்கது. (சுயமொழிகளில் பயின்றவர்கள் 89% ஆங்கில மொழியில் பயின்றவர்கள் 11%)

**அட்டவணை (2)**

| சமயவகைப்படி சமயபிரிவு | ஆங்கிலப்பாடசாலைகள் (1925)தொகை |
|---|---|
| 1. அமெரிக்கன் மிஷன் | 10 |
| 2. அங்கிலிக்கன் | 50 |
| 3. கத்தோலிக்க சமயம் | 65 |
| 4. வெஸ்லியன் | 20 |
| 5. பௌத்தசமயம் | 25 |
| 6. பிற | 15 |
| **மொத்தம்** | **185** |

மற்றொரு முக்கிய அம்சம் நாட்டிலிருந்த ஆங்கிலப் பாடசாலைகள் பல்வேறு சமய நிறுவனங்களினால் நடத்தப்பட்டமையாகும். மொழி அடிப்படையில் மட்டுமன்றி சமய அடிப்படையிலும் பாடசாலைகள் வெவ்வேறாக இயங்கின. இந்நிலை நாடு சுதந்திரமடைந்த பின்னரும் நீடித்து நிலவுகின்றது.

**இலங்கையில் ஒரு புறம் சமயச் சார்பற்ற தன்மை நிலை நாட்டப்பட்டு வந்தாலும் பல பாடசாலைகள் தமது சமய தனித்துவ அடையாளத்தைப் பேணுவதில் அக்கறை செலுத்து கின்றன. இலங்கையில் அதற்கான சட்ட ரீதியான தடை எதுவுமில்லை. சில பாடசாலைகளில் சகல இன மாணவர்களும் பயிலுகின்றார்கள். பல்வேறு மதங்களைச் சார்ந்த மாணவர்களுக்கு அவரவர் சமயம் கற்பிக்கப்படவும் ஏற்பாடுகள் உண்டு.**

பௌத்த சமய இயக்கங்களும் பௌத்தர்களுக்கு ஆங்கிலகல்வி வாய்ப்புக்களை வழங்கும் வகையில் பல ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவியமை குறிப்பிடத்தக்கது (கொழும்பு- ஆனந்தா, கண்டி-தர்மராஜ, பதுளை - தர்மதூத கல்லூரி) இந்துக்களும் இவ்வாறான பல ஆங்கிலக் கல்லூரிகளைத் தோற்று-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்திருந்தனர் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)

இவ்வாறு மொழி, சமயம், கலாசாரம் என்பவற்றின் அடிப்படையில் பிளவுபட்டுக்காணப்பட்ட பாடசாலை முறையானது தேசிய ஒருமைப்பாட்டின் வளர்ச்சிக்கும் தேசிய அபிவிருத்திக்கும் உதவவில்லை; ஒரு புறம் ஆங்கிலப் பாடசாலைகள் உயர்கல்வி, மற்றும் தொழில் வாய்ப்புகளையும் சமூக, பொருளாதார அந்தஸ்தையும் வழங்கின ; மறுபுறம் சுயமொழிகளில் பயின்ற பெரும்பாலான மாணவர்களுக்கு இவ்வாறான வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டன. ஆங்கிலக்கல்வியும் சுயமொழிக்கல்வியும் இருவகையான கலாசாரக்குழுக்களை உருவாக்கின. சாதி, சமயம், இனம், மொழி, பிராந்தியம் என்ற அடிப்படையில் பிளவுபட்டுக் கிடந்த இலங்கைச் சமூகம் ஆங்கில மொழிகற்றோர் , சுயமொழி கற்றோர் என்ற புதிய இரு கலாசார மொழிக்குழுவினரைப் பெற்று மேலும் பிளவுபட்டது. ஆங்கிலேயரின் இராஜதந்திரக் கொள்கை இலங்கையர்களை இன அடிப்படையில் பிரித்து ஆண்டமை (Divide and Rule) தெரிந்த விடயம் ; மேலும் அவர்களுடைய கல்விக் கொள்கை ஒவ்வொரு இனத்தையும் மொழியடிப்படையில் பிரித்தாள உதவியது.

> **மொழி, சமயம், கலாசாரம் என்பவற்றின் அடிப்படையில் பிளவுபட்டுக் காணப்பட்ட பாடசாலை முறையானது தேசிய ஒருமைப்பாட்டின் வளர்ச்சிக்கும் தேசிய அபிவிருத்திக்கும் உதவவில்லை ஒரு புறம் ஆங்கிலப் பாடசாலைகள் உயர்கல்வி, மற்றும் தொழில் வாய்ப்புகளையும் சமூக, பொருளாதார அந்தஸ்தையும் வழங்கின' மறுபுறம் சுயமொழிகளில் பயின்ற பெரும்பாலான மாணவர்களுக்கு இவ்வாறான வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டன. ஆங்கிலக்கல்வியும் சுயமொழிக்கல்வியும் இருவகையான கலாசாரக்குழுக்களை உருவாக்கின. சாதி, சமயம், இனம், மொழி, பிராந்தியம் என்ற அடிப்படையில் பிளவுபட்டுக் கிடந்த இலங்கைச் சமூகம் ஆங்கில மொழிகற்றோர், சுயமொழி கற்றோர் என்ற புதிய இரு கலாசார மொழிக்குழுவினரைப் பெற்று மேலும் பிளவுபட்டது.**

சுதந்திரத்தின் பின்னரும் இலங்கையின் பாடசாலை முறையானது தொடர்ந்து வெவ்வேறு பாடசாலை வகை (type) என்ற முறையிலும் மொழி அடிப்படையிலும் நிர்வாகக் கட்டுப்பாட்டு அடிப்படையிலும் பிளவு பட்டுக் காணப்படுகின்றது.

பாடசாலைகளில் உள்ள வகுப்புகளின் (தரங்களின் -Grades) அடிப்படையில் பாடசாலைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. 1A B வகை (க.பொ.த உ.நி விஞ்ஞான வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகள் 5.9% (587) பெரும்பாலும் நகர்ப்புறப் பாடசாலைகள்)
2. 1C வகை (க.பொ.த உ.நி கலை, வர்த்தக வகுப்புகளைக் கொண்டவை) 40.8% 1860 (பெரும்பாலும் கிராமப்புறப் பாடசாலைகள் )
3. 2 ஆம் வகை க.பொ.த.சா.நி வகுப்புகள் வரை 36.7% (3877) (சாதாரண வகுப்பினருக்கானவை)
4. 3 ஆம் வகை 5-7 ம் தரங்கள்வரை ('சிறிய' பாடசாலைகள், கிராமப்புறங்களிலும் உள்ளூர் பகுதிகளிலும் இயங்குபவை) 39% (3960)

(தரவு 1997)

இவ்வரசாங்கப் பாடசாலைகளில் பல மத்திய அரசின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டு அந்தஸ்து உயர்த்தப்பட்டு "தேசிய பாடசாலைகள்" என அழைக்கப்படுகின்றன. திட்டவட்டமான நியமங்களின் அடிப்படையில் இவை தரம் உயர்த்தப்படவில்லை.

இவற்றைவிட பல்வேறு சமய நிறுவனங்களைச் சார்ந்த தனியார் பாடசாலைகளும் காணப்படுகின்றன. இவை அரச கல்வி முறைக்கு வெளியே இயங்குபவை. சில பாடசாலைகளுக்கான ஆசிரியர் சம்பளங்களை அரசாங்கமே வழங்கி வருகின்றது.

எந்த விதமான கல்வி அமைச்சின் கட்டுப்பாட்டுள்குள்ளும் வராது, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பல சர்வதேசப் பாடசாலைகளும் தற்போது விரிவடைந்து வருகின்றன. இப்பாடசாலைகள் வெளிநாட்டுப் பாடசாலைப் பாட ஏற்பாட்டைப் பயன்படுத்தி ஆங்கில வழியில் கல்வி வழங்கி வருகின்றன. தற்போது உள்ளூர் பரீட்சைகளுக்கு (க.பொ.த. ச/ நி, க.பொ.த உ/நி மாணவர்கள் தோற்றவும் அனுமதி வழங்கப்படுவதாகத் தெரிகின்றது.

இப்பாடசாலைகளில் வழங்கப்படும் ஆங்கில வழிக்கல்வியின் காரணமாக, தெரிவு செய்யப்பட்ட அரசாங்கப்பாடசாலைகள் சிலவற்றில் விஞ்ஞானம், கணிதம் முதலிய பாடங்களையாவது ஆங்கிலத்தில் போதிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சில பிரபல்யமான பாடசாலைகள் ஆரம்ப வகுப்பு முதல் ஆங்கில வழிக்கல்வியை வழங்கி வருகின்றன.

**அட்டவணை (3)**

**இலங்கையில் பாடசாலைகள் தொகை 2001**

| | |
|---|---|
| அரசாங்கப் பாடசாலைகள் | 9565 |
| தேசிய பாடசாலைகள் | 322 |
| தனியார் பாடசாலைகள் | 78 |
| பிரிவேனாக்கள் | 583 |
| **மொத்தம்** | **10548** |

புள்ளிவிபரக் கையேடு 2002,
ஆதாரம் : புள்ளிவிபர, மதிப்பீட்டுத் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| அட்டவணை (4) | |
|---|---|
| **பாடசாலை வகைப்படி பாடசாலைகள் தொகை 2001** | |
| 1. 1AB வகைப் பாடசாலைகள் (க.பொ.த உ/த விஞ்ஞான வகுப்புடன்) | 584 |
| 2. 1C வகைப் பாடசாலைகள் (க.பொ.த.உ/த கலை, வர்த்தகவியல், வகுப்புகளுடன்) | 1844 |
| 3. 2 ஆம் வகைப் பாடசாலை (தரம் 10 வரை அல்லது 6-9 தொடக்கம் 11 ஆந் தரம் வரை) | 4030 |
| 4. 3 ஆம் வகைப் பாடசாலைகள் (வகுப்புகள் 1-5 அல்லது 1-5 வரை ) | 3429 |

இலங்கையின் பொருளாதார சமூக புள்ளி விபரங்கள், மத்திய வங்கி, 2002

தற்போதைய பாடசாலை முறையின் மற்றொரு அம்சம் சிறிய பாடசாலைகள் தொடர்ந்து மேலும் சிறிய பாடசாலைகளாகவும், பெரிய பாடசாலைகள் மேலும் பெரிய பாடசாலைகளாகவும் மாறிக்கொண்டு வருவதாகும். இன்று நாட்டில் காணப்படுகின்ற 9800 பாடசாலைகள் எந்தவகையிலும் - மாணவர் தொகை, அடிப்படை வசதிகள் என்பவற்றைப் பொறுத்தவரையில் சமமானவையல்ல, இவற்றில் 2757 பாடசாலைகளில் 100க்கும் குறைவான மாணவர்களே பயிலுகின்றனர்; 27.8 சதவீதமான பாடசாலைகள் இப்படிப்பட்டவையாகும். (2001); 1981 இல் இப் பாடசாலைகளின் தொகை 2249 ஆக மட்டுமே இருந்தது (23.6%). ஆனால் இரு தசாப்தகாலத்தில் இப்பாடசாலைகளின் தொகை அதிகரித்து விட்டது. பிறப்பு வீதம் குறைந்து வருவதும், பெற்றோர்களில் வசதி மிக்கவர்கள் பெரிய பாடசாலைகளை நாடுவதும் இதற்குப் பிரதான காரணங்களாகும்.

அவ்வாறே 1500 மாணவர்களுக்கு அதிகமானவர்களைக் கொண்ட பாடசாலைகளின் தொகை 1981 இல் 191 ஆக இருந்து 2001 இல் 494 ஆக அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இனரீதியாக நோக்குமிடத்து நாட்டில் உள்ள பாடசாலைகளில் 72% சிங்களப் பாடசாலைகள்; 21% தமிழ்ப் பாடசாலைகள்; 7% முஸ்லீம் பாடசாலைகள்; 1சதவீதமான பாடசாலைகளிலேயே இரு மொழிப் பிரிவுகளும் காணப்படுகின்றன (2001).

சமூக வகுப்பு ரீதியாக நோக்குமிடத்து பிறநாடுகளில் இருப்பது போலவே இலங்கைப் பாடசாலைகளும் நாட்டிலுள்ள சமூக வகுப்பு முறைமையைப் பிரதிபலிப்பதாகவே வளர்ச்சி பெற்றுள்ளன. ஒரு புறம் விரிவாக வழங்கப்படும் கல்வி வாய்ப்புகள், இலவசக்கல்வி, கிராமப் புறங்களில் அமைந்துள்ள இடைநிலைப் படசாலைகள் 1AB, 1C பாடசாலைகள்) பின்தங்கிய வகுப்பினரின் சமூக நகர்வுக்கு உந்து சக்தியாக விளங்கும் என்று கூறப்படுகின்றது. மறுபுறம் பின்தங்கியவர்களுக்கென்று 2ஆம் 3ஆம் வகைப் பாடசாலைகளும் அமைந்துள்ளன. இவ்வகைப் பாடசாலைகளில் பின்தங்கிய பிரிவினரின் பிள்ளைகளே அதிகமாகக் காணப்படுகின்றனர்; அவ்வாறே தனியார் பாடசாலைகளும் சர்வதேசப் பாடசாலைகளும் வசதியானவர்களின் பிள்ளைகளுக்கே உரியவை; இந்நிலையில் கல்விமுறையானது சமூக வகுப்பு வேறுபாடுகளைக் குறைப்பதற்கு உதவாது அவ்வேறுபாடுகளை வலுப்படுத்தி, நிரந்தரத்துவப்படுத்தும் பணியையே செய்கின்றன என்ற நவமார்க்ஸியவாதிகளின் கருத்தில் உண்மை இல்லாமல் இல்லை. அவர்களுடைய நோக்கில், 'கல்வியின் பணி சமமான கல்வி வாய்ப்புகளினூடாக சமத்துவ சமூகமொன்றின் உருவாக்கத்துக்கு வழிகோலுவதல்ல ; முதலாளித்துவ சமூகங்களில் பாடசாலைக் கல்வியானது வர்க்க பேதங்களைக் கொண்ட சமூக அமைப்பைத் தொடர்ந்து மீளுருவாக்கம் செய்வதில் வெற்றி கண்டுள்ளது. இலங்கை நிலைமைகளில், கொழும்பில் வறியவர்கள் வாழும் பகுதிகளில் வசதிகள் குறைந்த சிறிய பாடசாலைகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. பிரபல்யமான கொழும்புப் பாடசாலைக்கு அருகிலும் இத்தகைய பாடசாலைகள் காணப்படுகின்றன.

இதற்கு அப்பால் சமய அடிப்படையில் பிரிவு பட்டுக் காணப்படும் பாடசாலை முறையொன்று இலங்கையில் காணப்படுகின்றது. பாடசாலைகள் தேசிய /அரச கட்டுப்பாட்டுக்குள் வந்தபோதிலும் அவற்றில் பல சமயப் பிரிவுகளைச் சார்ந்த பௌத்த, இந்து, கிறித்தவ, முஸ்லீம் பாடசாலைகளாக விளங்குவதும்

**தற்போதைய பாடசாலை முறையின் மற்றொரு அம்சம் சிறிய பாடசாலைகள் தொடர்ந்து மேலும் சிறிய பாடசாலைகளாகவும், பெரிய பாடசாலைகள் மேலும் பெரிய பாடசாலைகளாகவும் மாறிக்கொண்டு வருவதாகும். இன்று நாட்டில் காணப்படுகின்ற 9800 பாடசாலைகள் எந்தவகையிலும் — மாணவர் தொகை, அடிப்படை வசதிகள் என்பவற்றைப் பொறுத்த வரையில் சமமானவையல்ல, இவற்றில் 2757 பாடசாலைகளில் 100க்கும் குறைவான மாணவர்களே பயிலுகின்றனர் 27.8 சதவீதமான பாடசாலைகள் இப்படிப்பட்டவையாகும். (2001) ; 1981 இல் இப்பாடசாலைகளின் தொகை 2249 ஆக மட்டுமே இருந்தது (23.6%). ஆனால் இரு தசாப்த காலத்தில் இப்பாடசாலைகளின் தொகை அதிகரித்து விட்டது. பிறப்பு வீதம் குறைந்து வருவதும், பெற்றோர்களில் வசதிமிக்கவர்கள் பெரிய பாடசாலைகளை நாடுவதும் இதற்குப் பிரதான காரணங்களாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கது. ஒருகாலத்தில் முழுக்கல்வி முறையுமே சமய நிறுவனங்களின் கட்டுப்பாட்டிற்குட்பட்டிருந்தன. மேற்கு நாடுகளில் கிறித்தவ மடாலயங்களும் கீழை நாடுகளில் இந்து ஆதீனங்களும் பௌத்த சங்கமும் விகாரைகளும் இஸ்லாமிய மதரசாக்களும் கல்வித்துறையைத் தமது பொறுப்பில் வைத்திருந்தன. கல்வித்துறையின் நவீனமயமாக்கம் பற்றி ஆராய்ந்தவர்கள் சமயச்சார்பற்ற கல்வி,அரசு கல்வித்துறையைப் பொறுப்பேற்றமை, சமயக்குரவர்கள் அன்றி பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், பல்கலைக்கழகப் பட்டதாரிகள் ஆசிரியர்களாக வந்தமை, தேசிய பாட ஏற்பாடு என்னும் அம்சங்களை கல்வித்துறை நவீன மயமாக்கத்தின் அம்சங்களாக இனங்கண்டனர். இப்பின்புலத்தில் இலங்கையில் இன்றும் பாடசாலைகள் சமய அடிப்படையில் பிரிவுபட்டுக் காணப்படுவது. ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

> சமய அடிப்படையில் பிரிவு பட்டுக் காணப்படும் பாடசாலை முறையொன்று இலங்கையில் காணப்படுகின்றது. பாடசாலைகள் தேசிய / அரச கட்டுப்பாட்டுக்குள் வந்தபோதிலும் அவற்றில் பல சமயப் பிரிவுகளைச் சார்ந்த பௌத்த, இந்து, கிறித்தவ, முஸ்லீம் பாடசாலைகளாக விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. ஒருகாலத்தில் முழுக்கல்வி முறையுமே சமய நிறுவனங்களின் கட்டுப்பாட்டிற்குட்பட்டிருந்தன. மேற்கு நாடுகளில் கிறித்தவ மடாலயங்களும் கீழை நாடுகளில் இந்து ஆதீனங்களும் பௌத்த சங்கமும் விகாரைகளும் இஸ்லாமிய மதரசாக்களும் கல்வித் துறையைத் தமது பொறுப்பில் வைத்திருந்தன.

இன்றைய கல்விமுறையானது பொதுப் பரீட்சைகளை நோக்காகக் கொண்டு வளர்ச்சி பெற்றுள்ளமையால் பாடசாலைகளும் இந்நோக்கையே கருத்திற்கொண்டு இயங்குகின்றன. ஒரு தனிப்பட்ட பாடசாலையின் பரீட்சைப் பெறுபேறுகளே அப்பாடசாலையைப் பொதுமக்கள் மத்தியில் பிரபல்யம் அடையச் செய்கின்றன. இதன் காரணமாகப் பாடசாலைகளுக்கிடையே ஆரோக்கியமற்ற போட்டி நிலை தோன்றியுள்ளது என்றும் விளையாட்டு மற்றும் இணைப்பாடச் செயற்பாடுகளிலும் இப்போட்டி நிலை உக்கிரமடைந்து வருகின்றது என்றும் தெரிகின்றது.

பாடசாலைகள் இவ்வாறு இன, மொழி, சமய மற்றும் சமூக வகுப்புரீதியாகப் பிளவுபட்டுக் கிடப்பது குறித்து இருவகையான நிலைப்பாடுகள் கற்றறிவாளர் மத்தியில் நிலவுகின்றன.

ஒரு சாரார் தேசிய ஒருமைப்பாட்டு உணர்வுகளுக்கும் தேசிய ஐக்கியத்துக்கும் முன்னுரிமை வழங்குகின்றவர்கள். இத்தகைய இலட்சியம் உயர்வானது என்றும் பாடசாலைக்கல்வி அதனை அடையும் வகையில் புனரமைக்கப்படல் வேண்டும் என்று கருதுபவர்கள். 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பிரிந்து கிடந்த சிறிய அரசுகளை ஒன்றிணைத்து தேசிய அரசுகள் தோன்றியபோது, இப்பின்புலத்திலேயே மத நிறுவனங்களின் பொறுப்பிலிருந்த கல்வி முறைமை தேசிய அரசுகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. கல்வி முறையினூடாக அரசுக்குக் கீழ்ப்படிவுள்ள பிரஜைகளை உருவாக்கலாம் என்ற கருத்து ஐரோப்பாவில் வலுப்பெற்றது. "நான் நாட்டில் காண விரும்புவதை முதலில் பாடசாலைகளில் அறிமுகம் செய்வேன்" என அப்போது நெப்போலியன் கூறியிருந்தான். பிஸ்மாக் காலத்து பிரஸ்யாவில்தான் இவ்வாறான நோக்குகளுடன் தேசியக்கல்வி முறையொன்று உருவாக்கப்பட்டது. வளர்ந்தோர் சரியென்று கருதும் விழுமியங்கள், சமூக நியமங்கள் என்பவற்றைக் கல்வி முறையினூடாக இளந்தலைமுறையினருக்கு வழங்கி அவர்களைச் சமூகமயப்படுத்துவதுதான் கல்வி ; சமூகத்தின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டுக்கு மிக அவசியமானது என்பது ஜெர்மன் நாட்டு சமூகவியலாளர் Emile Durkheim இன் சிந்தனை.

தென்கிழக்காசிய நாடுகளான மலேசியா, மியன்மர், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் இவ்வாறான தேசிய ஒருமைப்பாட்டு நோக்கங்களுக்காகக் கல்வி முறை பெரிதும் பயன்படுத்தப்பட்டது. இப்பின்புலத்தில் இந்நாடுகளில் வாழ்ந்த சீனச் சிறுபான்மையினரின் சீன மொழிப்பாடசாலைகளின் வளர்ச்சி ஊக்குவிக்கப்படவில்லை. இப்பாடசாலைகள் தேசிய ஒருமைப்பாட்டுக்குக் குந்தகமாகவும் நாட்டுப் பற்றற்ற சக்திகளின் வளர்ச்சிக்கும் தூண்டுகோலாகவும் அமையும் எனக் கருதப்பட்டமையால் இந்நாடுகளின் கல்வி முறையில் பிற கலாசாரங்களுக்கும் மொழிகளுக்கும் இடமளிக்கப்படவில்லை. உதாராணமாக, மலேசியாவில் சீன மற்றும் இந்தியத்தமிழ்ச் சிறுபான்மையினர்கள் தமது தாய்மொழியில் ஆரம்பக் கல்வியை மட்டுமே பெறமுடியும். அதன் பின்னர் இடைநிலைக்கல்வி உயர்கல்வி என்பவற்றை மலேசிய மொழியிலேயே பெறமுடியும். சுருங்கக் கூறின் தேசிய ஒருமைப்பாடு, தேசிய ஐக்கியம் என்னும்இலக்குகள் முன்னுரிமை பெறும்போது, சிறுபான்மையினரின் தாய்மொழிக்கல்வி உரிமை, பாடசாலைகளை நடாத்தும் உரிமை என்பன மறுக்கப்படுகின்றன.

இலங்கையின் பாடசாலை முறைமை பற்றி இக்கட்டுரையின் முற்பகுதியில் எடுத்துக் கூறப்பட்ட அம்சங்கள் குறித்து இலங்கை ஆய்வாளர்கள் மத்தியில் நிலவும் கருத்துக்கள் பின்வருமாறு:

* இலங்கைப் பாடசாலை முறைமை இனம், மொழி மற்றும் சமய அடிப்படையில் பிளவுபட்டிருப்பதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாடு தேசியக்கல்வி முறையொன்றை உருவாக்குவதில் தோல்வி கண்டுவிட்டது.

* இன்று இந்நாட்டில் காணப்படும் பிரதான சமூகங்களுக்கிடையே நிலவும் முரண்பாடுகள், மோதல்கள் என்பவை உருவாக்குவதற்குக் கல்விமுறையின் பங்களிப்பும் உண்டு. சமூகங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தக் கல்விமுறை தவறிவிட்டது. 'ஒன்றாகக் கூடி வாழ்தல்' என்னும் கல்வியின் நோக்கு கல்வி முறையினால் முற்றாகக் கருத்திற் கொள்ளப்படவில்லை.
* பாடசாலை முறையில் காணப்படும் பிளவுபட்ட தன்மை நாட்டையே பிரிக்கும் (divided nation) நிலைக்கு இட்டுச் சென்று விட்டது.
* பல்வேறு சமூகப் பிரிவினரிடையே பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான சமூக நியாயத்தன்மை வாய்ந்த கல்வி முறையொன்று உருவாக்கப்படல் வேண்டும். பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த இளந்தலைமுறையினர் மத்தியில் ஒத்துழைப்பையும் பரஸ்பர புரிந்துணர்வையும் ஏற்படுத்தி அவர்களுக்குக் கல்வியில் சமவாய்ப்புகளை வழங்கும் வகையில் பாடசாலைமுறை மறுசீரமைப்புக்குள்ளாக வேண்டும்.

இப்பின்புலத்தில் 1996 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவிடம் சமர்பிக்கப்பட்ட Delors அறிக்கையில் எடுத்துக் கூறப்பட்ட கல்வியின் நான்கு தூண்கள் பற்றி இவ்விடத்துக்குறிப்பிட வேண்டும். அறிவு பெறக் கற்றல், செயலுக்கான கற்றல், வாழக்கற்றல் என்பவற்றோடு 'கூடி வாழக்கற்றல்' (Learning to live together) என்ற நான்காவது கல்வித்தூண்' இலங்கை நிலைமைகளில் இன்று பிரதானமானதாக உள்ளது. பிறமக்களைப் பற்றிய புரிந்துணர்வு ஒருவரில் ஒருவர் தங்கி இருத்தலை (interdependence) வரவேற்றல், கூட்டாகச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல், பிணக்குகளைத் தீர்க்கவும் முகாமை செய்யவும் கற்றல் போன்ற வழிமுறைகளினூடாகவே சமாதானத்தையும் பன்மைத்தன்மையையும் பரஸ்பர புரிந்துணர்வையும் ஏற்படுத்த முடியும் என்ற Delors அறிக்கையின் கருத்து ஆழ்ந்து நோக்கத்தக்கது.

---

கல்வி என்பது மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதம். அதனை உலகையே மாற்றுவதற்குப் பயன்படுத்தலாம்.

*நெல்சன் மண்டேலா*

---

ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு சிறந்த கல்வியை வழங்க வேண்டுமென அரசு மனஉறுதி கொள்ளுமானால், அதனை அளிக்கும் தொல்லையிலிருந்து அது தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும். அந்தக் கல்வியை எங்கு, எப்படிப் பெறுவது என்பதைப் பெற்றோரின் விருப்பத்துக்கு விட்டுவிட வேண்டும். ஏழை வர்க்கத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கான கல்விக்கட்டணங்களைச் செலுத்த உதவி புரிவதுடன் அரசு நின்று விட வேண்டும்.

*ஜான் ஸ்டுவர்ட் மில்*
*பிரிட்டிஷ் தத்துவ அறிஞர்*
*(1806 — 73)*

---

கல்வி உளவியலின் அடிப்படை எண்ணக்கருவாக விளங்குவது கற்பித்தல் என்றால் என்ன என்பதனை விளங்கிக் கொள்ளலாகும். கற்பித்தல் தொடர்பான அடிப்படைகளை உரியவாறு விளங்கிச் செயற்படுவதால் மட்டுமே வகுப்பறையை இயங்குநிலையில் வைத்திருக்கலாம். இயங்குநிலை வகுப்பறை என்னும் போது, கற்போன் எப்போதும் கற்றலில் ஆர்வம் காட்டுபவனாகவும் புதியவற்றைத் தேடி இயங்கத் துடிப்புள்ளவனாகவும் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

*உ.நவரத்தினம், புலமை இதழ் — 1*
*பக் 15, 2004*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கல்வியின் இன்றைய கடப்பாடு

மனிதன் ஒரு சமூக விலங்கு. விலங்கு மனத்தின் வலிசான்றை மனிதனிடம் காணலாம். அதன் ஆதிக்கத்திலிருந்து மனித மனத்தை விடுவிப்பதே கல்வியின் பணி. அதாவது கல்வி என்பது மனிதனின் விலங்கியல் இயல்பூக்கத்தை மாற்றியமைப்பதாகும். மனிதம் மறுக்கப்பட்டு, மனிதனால் உருவாக்கப்படும் பொருட்கள் இன்று முக்கியத்துவம் பெற்று வருகின்றன. எதிர்கால மனித செயற்பாடுகள் யாவும் பெருமளவில் இயந்திரங்களையே சார்ந்ததாகி விடும். இதனால் மனிதம் சார் பண்புகள் மேலும் சரியத் தொடங்கும். இவற்றையெல்லாம் நாம் சந்திக்காமல் இருக்க வேண்டுமானால் கல்வி தன் கடமையை அவசரமாக நிறைவேற்றத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

அனுஷ்யா சத்தியசீலன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
கல்வியற்றுறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஒரு நாட்டின் நல்ல சமுதாயத்தை உருவாக்குவதில் மனிதநேய விழுமியங்கள் குறிப்பிடத்தக்க இடத்தினை வகிக்கின்றன. இந்த மனிதநேய விழுமியங்கள் மனித மனத்தின்கண் உருவாக்கப்படுதல் அவசியம். ஏனெனில் அக உணர்வுகளின் வெளிப்பாடுகளே புற உலக நடைமுறைகளுக்குக் காலாகின்றன. இத்தகைய மனிதநேய உணர்வுகளை வெறுமனே மேடைப் பேச்சுக்களாலும், வார்த்தை வடிவங்களாலும் மட்டும் உருவாக்கி விடமுடியாது. அவை ஒவ்வொரு மனிதனதும் மனத்திலே உருவாக வேண்டும். உருவாக்கப்பட வேண்டும். அத்தகைய பண்புகளை உருவாக்குவதில் கல்வி அன்று சிறப்பானதோர் இடத்தினை வகித்தது. ஆயின் இன்று கல்வியிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற அவசரதேவையாக அது மாறிவிட்டது. கால மாற்றங்களுக்கேற்ப கல்வி நோக்கங்கள், தத்துவங்கள், பணிகள் பரந்தும், விரிந்தும் செல்ல வேண்டியது அவசியமானதும் பொருத்தமானதும் கூட. ஆயினும் கல்வியின் அடிப்படை நோக்கம், அடிப்படைப்பணி மறக்கப்படுவதோ மழுங்கடிக்கப்படுவதோ நல்லதோர் எதிர்கால சமுதாய உருவாக்கத்திற்கு வழிசமைப்பதாக அமையாது.

சமுதாயம் என்பது தனிமனிதர்களின் கூட்டுத்தொகுப்பாகும். ஆகவே தனிமனிதர்கள் மனிநேயம் கொண்டவர்களாகச் செயற்படும்போதுதான் சமுதாயம் நல்ல சமுதாயமாகின்றது. இன்று நாட்டில், உலகில் விழுமியச் சிதைவு மிகுந்து காணப்படுகின்றது. வலிமை, ஆக்கிரமிப்பு, ஒப்பிடல், போட்டி, பதற்றம் இயற்கையைப் பாழ்படுத்தும் மனப்பாங்கு இவையனைத்தும் மிகுந்து காணப்படுகின்றன. நல்ல சமுதாயம் உருவாக்கப்பட வேண்டுமானால் அங்கு மனிதத்துவம் வாழவேண்டும். மனிதத்துவம் வாழவேண்டுமானால் மேற்கூறப்பட்டவை களையப்பட்டு சகிப்புத்தன்மை (Tolaration), பரிசீலிக்கும் மனப்பாங்கு (Consideration), புரிந்துணர்வு (Understanding), ஒருமைப்பாடு (Integration), வேறுபாடு பாராட்டாத தன்மை (Non-Divitive mind) கூட்டுறவு (Cooperation), சுதந்திரம் (Freedom), அச்சமின்மை (Fearlessness), இயற்கையை நேசித்தல் (Loving Nature) போன்ற நல்ல பண்புகள் உருவாக்கப்பட வேண்டியது அவசியமானதாகின்றது.

ஒரு சமுதாயம் அறிவியல், தொழிநுட்ப மேம்பாடுகளில் உயர்ந்து விளங்கினால் அது வல்லாண்மைமிக்க சமுதாயமாகக் கருதப்படத்தக்கதேயொழிய நல்ல சமுதாயமெனக் கொள்ளப்படத்தக்கதல்ல. நல்ல சமுதாயமானது சில ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டதாகும். இத்தகைய சமுதாயத்தில் மட்டுமே யாவரும் சமச்சீர் உறவுடன் வாழமுடியும். இத்தகைய சமுதாயத்தை கட்டமைக்க வேண்டிய கடமை கல்விக்குண்டு. அன்று இந்நோக்கங்களை கல்வி சிறப்பாகச் செய்தது அல்லது குறிப்பிடத்தக்களவில் செய்தது. "அறம் செய்ய விரும்பு", "ஆறுவது சினம்", "ஒப்புரவொழுகு", "ஓதுவது ஒழியேல்", "பெரியாரைக் கனம் பண்ணு" என்ற உயர்ந்த எண்ணங்களை , பண்புகளை விதைப்பதாக, வளர்ப்பதாகத்தான் அன்றைய கல்வி ஆரம்பித்தது. வளர்ச்சியும் கண்டது. ஆனால் இன்று கல்வியின் நோக்கு, பணி விசாலித்ததாகச் சொல்லப்பட்டாலும் அடிப்படையில் தடம் புரளத் தொடங்கியுள்ளமையே இன்றைய நிகழ்வுகள் பல பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

கல்வியின் நோக்கங்கள், பணிகள் பற்றிய 20 ஆம் நூற்றாண்டுச் சிந்தனைகள் சிலவற்றை இங்கு சுட்டுதல் பொருத்தமானதாகும். சுவாமி விவேகானந்தரின் கருத்துப்படி கல்வியின் முக்கிய நோக்கம் நன்நடத்தையை உருவாக்குவதும், மனத்தின் ஆற்றலை உயர்த்துவதும், ஒருவன் தன் சொந்தக் காலில் நிற்கும் திறனை வளர்க்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதுமாகும். கல்வி பற்றிச் சொல்ல வந்த காந்திஜியோ "என் அன்பார்ந்த மகனே உன் கல்வி பற்றிச் சரியான அக்கறை எடுத்துக் கொள்ளப்படவில்லையென்று சில சமயம் நீ குறைப்பட்டிருக்கக்கூடும். வெறும் எழுத்தறிவு மட்டும் கல்வியாகாது. அதன்பணியும் அதுவல்ல. நன்நடத்தையை விருத்தி செய்வதுதான் உண்மையான கல்வி" என்றார். மேலும் இது பற்றிக் குறிப்பிட வந்த சிந்தனையாளர் ஜே.கிருஸ்ணமூர்த்தி "கல்வி மாணவர்களுக்கு அறிவார்ந்த பயிற்சி அளிப்பது சரியே. ஆனால் அது கல்வியின் ஒரு பகுதி மட்டுமே. மற்றொரு பகுதியானது இளம் மனங்களில் வாழ்வின் விழுமியங்களைச் செயற்படுத்துவது அவசியம். இத்தகைய செயற்பாடுகளின்றி அடையப்படும் கல்வி வெறும் வெற்றுக் கல்வியாகும்." என்றார். கல்வியியலாளர் Dr. இராதாகிருஷ்ணனின் கருத்து பின்வருமாறு அமைந்தது. "உன்னத மரபுகளையும், அன்பையும், இரக்கத்தையும் ஒருவரிடம் பேணி வளர்க்கவும், முழுமையான வாழ்க்கையை வாழ உதவுவதுமே கல்வியாகும்" என்றவர் தொடர்ந்து "கல்வி என்பது தேர்வில் வெற்றி பெறுவது மட்டுமல்ல, பட்டம் பதவிகளைப் பெறுவது மட்டுமல்ல. மாறாக எல்லையற்ற இயற்கை அழகை ரசிப்பதும், நேசிப்பதும் கூடக் கல்வியேயாகும்" என்றார்.

**அன்றைய கல்வி படிக்கும் பாடத்தைப் புரிந்து கொள்ளச் செய்ததுடன், அதனூடாக முடிந்தவரையில் மனித நேயப் பண்புகளை ஊட்டி ஒருவருடைய ஆளுமையை வளர்த்து சமுதாயத்தில் சராசரியான நல்ல பயனுள்ள வாழ்வை நடத்துமளவிற்கு அவனை வழிநடத்தியது. ஆனால் இன்றைய கல்வி எதனைச் செய்கின்றது? வெறுமனே நூல் அறிவினைத் தேடுவதாக, அறிவியல் தொழிநுட்ப வல்லுனர்களாக, உயர் பட்டம் பதவி பெற்றவர்களாக அதனூடாக நாட்டுக்கு அவைசார்ந்த வளர்ச்சியை மட்டும் முன்னெடுப்பவர்களாகத் திகழ்கின்றார்கள். ஆயின் இத்தகைய வல்லோர்கள் சீரிய பண்பு மிக்கவர்களாகத்தான் திகழ்வார்கள் என்பதில்லை. இதனால் அவர்கள் கல்வியும், திறமையும் அழிவுச் சக்திகளாக மாற்றம் பெறவும் இடமுண்டு.**

அன்றைய கல்வி படிக்கும் பாடத்தைப் புரிந்து கொள்ளச் செய்ததுடன், அதனூடாக முடிந்தவரையில் மனிதநேயப் பண்புகளை ஊட்டி ஒருவருடைய ஆளுமையை வளர்த்து சமுதாயத்தில் சராசரியான நல்ல பயனுள்ள வாழ்வை நடத்துமளவிற்கு அவனை வழிநடத்தியது. ஆனால் இன்றைய கல்வி எதனைச் செய்கின்றது? வெறுமனே நூல் அறிவினைத் தேடுவதாக, அறிவியல் தொழிநுட்ப வல்லுனர்களாக, உயர்பட்டம் பதவி பெற்றவர்களாக அதனூடாக நாட்டுக்கு அவைசார்ந்த வளர்ச்சியை மட்டும் முன்னெடுப்பவர்களாகத் திகழ்கின்றார்கள்.

ஆயின் இத்தகைய வல்லோர்கள் சீரிய பண்பு மிக்கவர்களாகத்தான் திகழ்வார்கள் என்பதில்லை. இதனால் அவர்கள் கல்வியும், திறமையும் அழிவுச் சக்திகளாக மாற்றம் பெறவும் இடமுண்டு. இன்றைய கல்வி எதனைச் செய்கின்றது.? சரியான பருவத்தில் உணர வைக்கப்பட வேண்டிய பண்புகள் பல அறியப்படாமலேயே போகச் செய்கின்றது. வெறுமனே பெறுபேறுகள், பதவிகளின் வழி ஒருவகையான போலிப் பெருமிதங்களைப் பெற்று சுற்றுச் சூழலின் உண்மைகளிலிருந்து தம்மை விலக்கிக் கொள்ளும் நிலைமைகளை இளந்தலைமுறைகளுக்கு அளிக்கின்றது எனக் குறிப்பிடுதல் பொருத்தமானதே.

மனிதன் ஒரு சமூக விலங்கு. விலங்கு மனத்தின் வலிசான்றை மனிதனிடம் காணலாம். அதன் ஆதிக்கத்திலிருந்து மனித மனத்தை விடுவிப்பதே கல்வியின் பணி. அதாவது கல்வி என்பது மனிதனின் விலங்கியல் இயல்பூக்கத்தை மாற்றியமைப்பதாகும். மனிதம் மறுக்கப்பட்டு, மனிதனால் உருவாக்கப்படும் பொருட்கள் இன்று முக்கியத்துவம் பெற்று வருகின்றன. எதிர்கால மனித செயற்பாடுகள் யாவும் பெருமளவில் இயந்திரங்களையே சார்ந்ததாகி விடும். இதனால் மனிதம் சார் பண்புகள் மேலும் சரியத் தொடங்கும். இவற்றையெல்லாம் நாம் சந்திக்காமல் இருக்க வேண்டுமானால் கல்வி தன் அடிப்படைக் கடமையை அவசரமாக நிறைவேற்றத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அதனை இளம் சமுதாயத்தினரிடமே ஆரம்பிக்க வேண்டும். ஏனெனில் நாளைய உலகம் இன்றைய குழந்தைகளால் வடிவமைக்கப்படுகின்றது. "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்", "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்பதற்கேற்ப கல்வியானது தனது அடிப்படைப் பணிகளை, அடிப்படைப் பயணத்தை இளம் சமுதாயத்திலிருந்து சரிவரத் தொடங்குமிடத்தேதான் கல்வியின் வெற்றி உண்மையான வெற்றியாக அமைய முடியும். அதுவே உண்மையான மனிதத்துவத்தின் வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைய முடியும்.

இன்றைய கல்வி அதிவிரைவான தொழில்நுட்ப வளர்ச்சிகளைச் சமுதாயத்தில் ஏற்படுத்தியிருப்பதென்னமோ உண்மைதான். ஆனால் அடிப்படைப் பண்புகள் வலுவிழந்து போகின்றமை அதனை விட நிதர்சனமானதாகும். இலங்கையைப் பொறுத்தவரையில் பரீட்சை, கல்விச் சான்றிதழ் போன்றன கல்வியை இன்று ஆக்கிரமித்துள்ளனவேயொழிய கல்வியின் உயர் இலட்சியங்களும் நோக்கங்களும் பெருமளவில் மறைந்து போகத் தொடங்கியுள்ளன என்று சுட்டிக் காட்டப்படுவதும் கருத்தில் கொள்ளத்தக்கது.

மகாத்மா காந்தியடிகள் குறிப்பிட்டது போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நற்குணம் சேரா அறிவும் மனிதப்பண்பில்லா அறிவியலும் மகாபாவங்கள்," என்பதனையொத்து எமது இளம் தலைமுறைக்கு, எதிர்கால சமுதாயத்திற்குக் கல்வியானது வாழ்வின் பயன்களை, மனிதத்துவத்தின் மதிப்புக்களை கற்றுத் தர வேண்டும். சீரிய சிந்தனைக்கும் அதன்வழி நேரிய செயலாக்கத்திற்கும் அழைத்துச் செல்ல வேண்டும். நல்ல அக உணர்வுகளையும் அதன்வழி சரியான புறச் செயற்பாடுகளையும் கல்வி அளிக்க வேண்டும். இத்தகைய கல்வியே எமது சிக்கல்களைத் தீர்த்து அமைதியும், அழகும் செறிந்த புதிய நாட்டை, புதிய உலகைப் படைக்க உதவும்.

ஒரு சமுதாயம் அறிவியல், தொழிநுட்ப மேம்பாடுகளில் உயர்ந்து விளங்கினால் அது வல்லாண்மை மிக்க சமுதாயமாகக் கருதப்படத்தக் கதேயொழிய நல்ல சமுதாயமெனக் கொள்ளப்படத்தக்கதல்ல. நல்ல சமுதாயமானது சில ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டதாகும். இத்தகைய சமுதாயத்தில் மட்டுமே யாவரும் சமச்சீர் உறவுடன் வாழ முடியும். இத்தகைய சமுதாயத்தை கட்டமைக்க வேண்டிய கடமை கல்விக்குண்டு. அன்று இந்நோக்கங்களை கல்வி சிறப்பாகச் செய்தது அல்லது குறிப்பிடத்தக்களவில் செய்தது.

### உசாத்துணை நூல்கள்


1. ஆறுமுகம் வ, கல்விப் பாரம்பரியங்கள், உயர்கல்விச்சேவை பதிப்பகம், யாழ்ப்பாணம். (1999)

2. உதயமூர்த்தி எம்.எஸ், எண்ணங்கள், வானதி பதிப்பகம், சென்னை,(2000)

3. கலாமணி, எம். குழந்தைப் பருவ மாணவர்களின் பிரச்சினைகளும் அவர்களின் ஒழுக்க முறையும் - ஓர் ஆய்வு, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், (1991)

4. Gandhi: M.K, An Autobiography , Navajivan Publishing House.

5. Patel M.S., The Educational Philosophy of Mahathma Gandhi Navajivan Publishing House,(1953)


---

கல்வி என்பது இப்பொழுது நாம் புரிந்து கொள்கிறபடிபார்த்தால் படித்தல், எழுதுதல், கணக்கிடல்,சம்பந்தப்பட்டதுதான். எழுத்து முதன்முதலாக உபயோகத்துக்கு வந்த காலத்தில் தான் கல்வி தொடங்கியிருக்க வேண்டும். ஏனென்றால் அப்பொழுது தான் எழுதிப்படிக்கின்ற கலையை ஒருவரிடமிருந்து மற்றவர்க்கு எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும். இன்றைய இந்தியா கி.மு.2600 முதல் கி.மு. 2000 வளர வியாபித்திருந்த சிந்து சமவெளி நாகரிகம் எழுத்து (லிபி) உபயோகத்துக்கு வந்த பின்னர் மலர்ந்த தொன்மையான கலாசாரங்களில் ஒன்றாக இருந்தது. ஆனால் துரதிஷ்டவசமாக, அன்றைய எழுத்துக்கள் இன்னமும் புரிந்து கொள்ளப் பட முடியாத நிலையில் இருப்பதால் அக்கால கட்டத்தில் எவ்வளவு அறிவு சார்ந்த விஷயங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன என்பது நமக்குத் தெரியவில்லை. அதுவே நமக்குத் தெரியாத நிலையில் அறிவு ஒருவரிடமிருந்து மற்றவர்க்குச் செல்லும் முறை எதுவாயிருந்திருக்கும் என்றெல்லாம் தெரிந்து கொள்வது எப்படி சாத்தியமாகும்?

பேரா. இர்ஃபான் ஹபீப்,<br>
நமது காலனி ஆதிக்கம் விட்டுச் சென்றகல்வி,<br>
கரும்பலகைக்கு பின்னால்<br>
தொகுதி 4 பக் 11, 2000

ஆலோசனை அல்லது வலியுறுத்தல் வாயிலாக குழந்தைக்கு நமது மன உறுதியைக் கொடுப்பது எளிது; ஆனால் அவ்வாறு செய்தால், அந்தக் குழந்தையிடமிருந்து மிகப் பெறும் உரிமைகளை தனது ஆளுமையைத் தானே உருவாக்கிக் கொள்ளும் உரிமையை புரிந்து விடுகிறோம்.

- மரியா மான்டியோரி -<br>
இத்தாலிய கல்வியாளர்<br>
*(1870-1952)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியம் : ஒரு பன்முகப் பார்வை

குழந்தைகளது இளமைப்பருவத்திலே, அவர்களது இளகிய உள்ளத்தில் பயனுள்ள பல அனுபவங்களைப் பதிய வைக்கும் மிகமுக்கிய பொறுப்பினைப் பாடசாலைகள் நிறைவேற்றுகின்றன. இப்பொறுப்பினை நிறைவேற்றும் கதாநாயகர்கள் "ஆசிரியர்" ஆவர். இவர்கள் சமுதாயத்தில் சிறப்புமிக்க உறுப்பினராவர். ஓர் ஆசிரியரது, பிரதான பணி குறிப்பான அறிவையும், நம்பிக்கையையும் இளைய தலைமுறையினருக்கு கையளித்தலாகும். சூழ்நிலையின் இயல்புகளை உணர்ந்து, அதனுடன் முற்போக்கான உயர்நிலைப் பட்டபொருத்தப்பாட்டினை குழந்தை அடைவதற்கு ஆசிரியர் உதவுகின்றார்.

கே.ஞானரெத்தினம்

ஆசிரியர், மட்டு / சிவாநந்தா

## அறிமுகம்

குழந்தைகளிடம், முடங்கிக்கிடக்கும் திறன்களையும், ஆற்றல்களையும் வெளிப்படுத்தும் செயல்முறையாக கல்வி விளங்குகின்றது. "கல்வி" எனப்படுவதனுள் அறிவுப் பெருக்கத்துக்குஉதவும் அனுபவங்கள் மட்டுமன்றி, மாணவர்களது உடல் வளர்ச்சி, மனவெழுச்சி முதிர்ச்சி, சமூக வளர்ச்சி போன்றவற்றிற்குத் துணை செய்யும் அனுபவங்களும் அடங்கும்.

கல்விச் செயல்முறைகள் திட்டமிடப்படாமலும், முறைப்பட்டதாக இல்லாமலும் இருக்கக்கூடும். அல்லது இது முறைப்பட்டதாகவும் இருக்கக்கூடும். இவற்றுள் திட்டமிட்டு, முறைப்படி செயல்படுத்தும் கல்வி இன்றியமையாததாகின்றது. இத்தகைய கல்வியினை இளந்தலைமுறையினருக்கு அளிப்பதில், சமூகம் மிகுந்த அக்கறை கொண்டு, இதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுள்ளது. முறைப்பட்ட கல்வியனுபவங்களின் துணையின்றி எவர் ஒருவராலும் தனது திறன்கள், ஆற்றல்கள் ஆகியவற்றினின்றும் முழுப்பயனைப் பெறமுடியாது. இத்தகைய கல்வியை பாடசாலைகள் அளித்து வருகின்றன. பாடசாலைகள், சமூக நிலையங்களுள் முக்கியமான மையப்பகுதியை வகிப்பனவாகும். குழந்தைகளது இளமைப்பருவத்திலே, அவர்களது இளகிய உள்ளத்தில் பயனுள்ள பல அனுபவங்களைப் பதியவைக்கும் மிகமுக்கிய பொறுப்பினைப் பாடசாலைகள் நிறைவேற்றுகின்றன. இப்பொறுப்பினை நிறைவேற்றும் கதாநாயகர்கள் "ஆசிரியர்" ஆவர். இவர்கள் சமுதாயத்தில் சிறப்புமிக்க உறுப்பினராவர். ஓர் ஆசிரியரது, பிரதான பணி குறிப்பான அறிவையும், நம்பிக்கையையும் இளைய தலைமுறையினருக்கு கையளித்தலாகும். சூழ்நிலையின் இயல்புகளை உணர்ந்து, அதனுடன் முற்போக்கான உயர்நிலைப்பட்டபொருத்தப்பாட்டினை குழந்தை அடைவதற்கு ஆசிரியர் உதவுகின்றார்.

வரலாற்று அடிப்படையில், ஓர் ஆசிரியர் அறிவைக் கையளிப்பவர் என்ற பாத்திரத்தையும், விழுமியங்களைப் பாதுகாப்பவர் என்ற பணியையும் வகிப்பார். இவை மூன்று முக்கிய அம்சங்களுடன் தொடர்புடையனவாகக் காணப்பட்டன.

1. மாணவர்களின் வயதுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற அறிவை வழங்குதல்
2. சமூகத்தில் சில விழுமியங்களைப் பேணுதல்.
3. முன்னேற்றமடையாத கலாசார வளர்ச்சி குன்றிய பகுதிகளுக்கு அறிவையும், விழுமியங்களையும் எடுத்துச் செல்லல்.

இவ்வாறான "சிறப்புமிக்க " பணியை ஆற்றுவதற்கு ஆசிரியரிடம் பல செம்மையான இன்றியமையாத பண்புகள் இருத்தல் வேண்டும். இப்பண்புகள் இயற்கையாகவோ அல்லது பயிற்சி, அனுபவம் ஆகியவற்றின் விளைவாகவோ ஓர் சிறந்த ஆசிரியரிடம் காணப்படல்வேண்டும்.

இத்தகைய மகிமை பொருந்திய "ஆசிரியர்" பற்றி பல கோணங்களில் ஆராய்வதே இங்கு எனது நோக்கமாக அமைகின்றது.

## ஆசிரியர் தொழில்

ஆசிரியர் தொழில் உலகிலுள்ள தொழில்களில் மிக உன்னதமான தொழில் எனப்படுகின்றது. இது சமூகத்தால் கௌரவிக்கப்பட வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தொழிலாகும். புதிய சமூக விழுமியங்களைத் தோற்றுவிக்க உதவ வேண்டிய ஆசிரியர், அதன் பொருட்டு அறிவினாலும், தொழில் சார்ந்த பயிற்சியி-னாலும் சிறந்த ஆளுமை பொருந்தியவராதல் வேண்டும். சமூக ஒழுக்கவியல், கலாசாரம் என்பவற்றின் உள்ளடக்கத்தை அறிமுகஞ் செய்து, மெருகூட்டும் சமூகச் சீர்திருத்தவாதியாக ஆசிரியர் செயற்பட வேண்டும். பிள்ளைகளின் உடல், உள அபிவிருத்தி பற்றிய, அடைவு மட்டங்களைத் தீர்மரனிப்பவர் அவரே-யாவார்.

ஆசிரியர் குழந்தைகளின், விருப்பு வெறுப்புகளை உணர்ந்து அவரவர் ஆற்றலுக்கு ஏற்பவும், வளர்ச்சிக்கு ஏற்பவும் சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்பவும் வழி-காட்டி குழந்தைகளின் அறிவாற்றல், திறன், மனப்பாங்கு ஆகியவைகளை உருவாக்குதல் வேண்டும்.

கற்பித்தல் எளிய செயலன்று, இது உடற் களைப்பை மட்டுமன்றி, உளக்களைப்பையும் தோற்று-விக்கவல்லது. பிறதொழிலில் ஓரளவு எளிதில், பெயரை-யும் புகழையும் பெற்றுவிடமுடியும். ஆனால் ஆசிரியர் தொழிலில் இதனை இலகுவாகப் பெற்றுவிட முடியாது. இதனை அமெரிக்க கல்வியாளரான "Henry Vendyke" இன் "புகழறியா ஆசிரியர்" பற்றிய சிறந்த கூற்று, இதனை தெளிவு படுத்தகின்றது.

மாணவர்கள் தாம், தொடர்பு கொள்ளும் நபர்களில் அவர்களது மனதைக் கவர்ந்த நபர், ஆசிரியரேயாவார். இவர் மாணவர்களது பல்வேறு பிரச்சனைகளை அவர்-கள் புரிந்து கொள்ளவும், அவற்றைத் தீர்த்து கொள்ள-வும், ஆலோசனை வழங்கும் ஒரு வழிகாட்டியாகச் செயற்பட வேண்டியவராகின்றார்.

சமூகத்தில் வேறு, எந்தவொரு தொழிலில் ஈடுபட்டுள்ள ஒருவரைவிட ஓர் ஆசிரியரது தனிப்பட்ட் சுதந்-திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவரது நடத்தைக் கோலங்கள் மீது மாணவர், அக்கறை செலுத்துவார்-கள். ஏனைய ஆசிரியர், பெற்றார், பழைய மாணவர், பாடசாலைச் சூழல் அனைவரும் ஆசிரியர் மீது கரி-சனை காட்டிவருவர்.

"தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை" ஆசிரியர் தொழில்பற்றி பின்வருமாறு கூறுகின்றது.

"பாடசாலை முறைமையில், மாணவர்களுக்கு அடுத்தபடியாக ஆசிரியர்கள் மிகமுக்கியமான மனித வளத்தொகுதியாகக் காணப்-படுகின்றனர். வகுப்பறையே ஒரு பாடசாலையில் "மைய நிலைமை" வகிக்கின்றது. இங்கு மாணவர்களும் ஆசிரியர்களுமே முதன்மையான பங்காளிகளாவர். மாணவ- ஆசிரிய இடைத்தாக்கமே கற்றல், கற்பித்தலில் பிரதான முயற்சிகளாக அமை-கின்றன. ஒரு வகுப்பறையின் வினைத்திறமை ஆசிரியர்-களைப் பற்றிய புலக்காட்சியிலே பெரிதும் தங்கியுள்ள-தென்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். மாண-வர்கள் ஆசிரியர்களை எந்தளவிற்கு உயர்வாக மதிக்கின்றார்களோ அந்த அளவிற்கே விளைவுகள் பயனுள்ளவையாயும் நிலை நிற்பனவாகவும் இருக்கும். இந்த அம்சமானது வகுப்பறையில் இத்தகைய நன்-மதிப்பை ஒருவர் காப்பாற்றியிருத்தலை எந்தவொரு மேற்பார்வையினாலும் உறுதிசெய்வதை அவசிய-மாக்குகின்றது. இதன் இலட்சியநோக்கு "சுயமேற்-பார்வை" என்பதாகும். எமது நாட்டிலே 70%முதல் 80% வரையிலான "ஆசிரியர்" பொறுப்புணர்ச்சியுடன் செய-லாற்றுபவர்களாகவும், பல சிரமங்களுக்கு மத்தியில் பாடசாலைக்கு சமூகமளிப்பவர்களாகவும் தமக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை, தம்மால் முடிந்தளவுக்கு நிறைவேற்றுபவர்களாகவும் உள்ளனர் என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன."

> சமூக ஒழுக்கவியல், கலாசாரம் என்பவற்றின் உள்ளடக்கத்தை அறிமுகஞ் செய்து, மெருகூட்டும் சமூகச் சீர்திருத்தவாதியாக ஆசிரியர் செயற்பட வேண்டும். பிள்ளைகளின் உடல், உள அபிவிருத்தி பற்றிய, அடைவு மட்டங்களைத் தீர்மானிப்பவர் அவரேயாவார்.
>
> ஆசிரியர் குழந்தைகளின், விருப்பு வெறுப்புகளை உணர்ந்து அவரவர் ஆற்றலுக்கு ஏற்பவும், வளர்ச்சிக்கு ஏற்பவும் சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்பவும் வழிகாட்டி குழந்தைகளின் அறிவாற்றல், திறன், மனப்பாங்கு ஆகியவைகளை உருவாக்குதல் வேண்டும்.

எமது நாட்டிலே இன்று உள்ள ஆசிரியர் தொகை 1,96,022 ஆகும். நாட்டிலுள்ள 10458 பாடசாலைகளிலும் இவர்கள் கடமையாற்றுகின்றனர். இந்தத் தகவல்களை இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2004 தெரிவிக்கின்றது.

இத்தகைய முடிவுகளிலிருந்து , ஆசிரிய தொழி-லுக்கு விசேட தகமைகள் உண்டு என்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடிகின்றது. ஆயினும் இது ஒரு சேவையா அல்லது தொழிலா? என்கின்ற வாதமும் நடைமுறையி-லுள்ளது. இது தொடர்பாக ஐக்கிய அமெரிக்க நாட்டைச் சேர்ந்த கல்வி-யாளர் Dr.Sidney Hook என்பவர் "கற்பித்தல் ஒரு தொழிலாகும்" என்று கூறுகின்றார். மேலும் இவர் ஒரு சேவையை ஒரு தொழிலாக ஏற்றுக் கொள்வதாயின் அதற்கு பின்வரும் ஐந்து பண்புகள் இருக்கவேண்டு-மென்கின்றார். அவை

1. குறிக்கப்பட்ட சேவையில் ஈடுபட் டுள்ளோர்கள் தங்களின் விருப்பு வெறுப்புகளைக் கருத்தில் கொள்ளாது பொதுமக்களின் நலனை நிறைவேற்றுவதற்கான சேவையைச் செய்வதற்கு அவாக் கொண்டவர்களாக இருத்தல்.
2. தொழில் பற்றி முறையான அறி-வைப் பெற்றிருந்து அதற்குரிய அறிவாற்றல், மனப்பாங்கு, திறன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் போன்றவற்றில் ஆழமான விளக்கம் பெற்று, அதைத் தேவையான சந்தர்ப்பங்களில் கையாள்வதற்கேற்ற திறமைகளை விருத்தி செய்தல்.

3. தொழிலில் சேரும் பொழுதும், அதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளும் பொழுதும் அங்கீகரிக்கப்பட்ட நியமங்களைக் காணல்.

4. தொழில் சம்பந்தமாக, முறையாக அமைக்கப்பட்டுள்ள நிறுவன மொன்றில், செயற்பாடுடைய அங்கத்தவராக இருத்தல்.

5. தொழிற்றுறைசார் சம்பந்தப்பட்ட கடமைகளை நடைமுறைப்படுத்தும் போது, சுயமாகவும், சரியாகவும் தீர்மானங்கள் எடுக்கும் திறனைப் பெற்றிருத்தல்.

இத்தகைய ஐந்து பண்புகளையும், கருத்தில் எடுக்கும் போது, ஆசிரியருக்கு இவை பொருந்துவதால் "கற்பித்தல் ஒரு தொழில்" என்ற முடிவை நாம் ஏற்றுக் கொள்ள முடிகின்றது.

## ஆசிரியர் தகுதி

கல்விக் கொள்கை, கல்வி நிர்வாகம் போன்றவை உயர் மட்டத்தில் உருவாக்கப்பட்டாலும், அவற்றை நடைமுறைப்படுத்துபவர்கள் ஆசிரியர்கள்தான். இதனால் அவர்கள் அச்சாணி போன்று முக்கியத்துவம் பெறுகின்றார்கள். பிள்ளைகளின் கல்வியில் நேரடியாகவும், உடனடியாஃகவும் தாக்கத்தை ஏற்படுத்துபவர்கள் அவர்களே. இதனால் அவர்களது "தகுதி" வலியுறுத்தப்படுகின்றது.

ஒரு "தகுதியை" உடையவர்களுடன் பல்வேறு தனிநபர்கள் தொடர்பு கொண்டிருப்பர். இத்தனிநபர்கள் சில எதிர்பார்ப்புகளைக் கொண்டிருப்பர். இவ் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப இவர்கள் நடந்து கொள்ள வேண்டும். இந்த எதிர்பார்ப்புகளே அந்த நிலைக்குரிய தகுதியை வரையறுக்கும்.

ஆசிரியர்கள் சமூகத்தின் தலைவர்களாக கருதப்படுகின்றார்கள். இதனால் மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் முன்மாதிரியாக அமையக் கூடிய நடத்தைகளை அவர்கள் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. N.Graves என்பவர் ஐந்து பரிமானங்கள் ஆசிரியர் தகுதியை நிர்ணயிக்கின்றன என்கிறார். அவை

1. தொழில் நுட்பவாரியானது (சிறந்தமுறையில் அறிவு வழங்கல்)

2. முனைப்பு வாரியானது (பிள்ளைகளின் அறிவு பெறுவதே முனைப்பு)

3. உணர்வு பூர்வமானது (பிள்ளைகளின் பிரச்சனைகளில் அக்கறை)

4. ஒழுங்கமைப்பு ரீதியானது

5. சமூக ரீதியானது (சமூகத் தொடர்பு)

"ஆசிரியர் தேர்ச்சி" பற்றிய கருத்துக்கள் சிந்தனைக்குரியவை. M.R.Price என்பவர். "ஆசிரியர் ஆட்சேர்ப்பு மிக முக்கியம். இது ஓர் உயர்திறன் வாய்ந்த தொகுதி, மேலும் இது கையாலாகாதவர்களுக்கான குப்பை மடுவம் அல்ல. ஆசிரியர்களின் பண்பை நிர்ணயிக்கும் காரணிகளுள் அவர்களை தெரிவு செய்யும் முறை மிக முக்கியமானதாகும்" என்று எடுத்துக் காட்டுகின்றார்.

எமது நாட்டில் கூட "ஆசிரியர் தகுதி" பற்றி பல பரவலான விமர்சனங்கள் காணப்படுகின்றன. எமது நாட்டில் 1990 களின் முற்பகுதிகளில் நடைபெற்ற ஆசிரியர் நியமனங்கள் தொழிலின்மைப் பிரச்சனைகளைத் தீர்க்கும் மார்க்கமாகவே அமைந்திருந்தன. இத்தகைய நியமனங்களால் எத்தகைய பாதிப்புகள் ஏற்படுமென்பது அப்போது கவனத்திற் கொள்ளப்படவில்லை.

இது தொடர்பான கருத்துக்கள் "கல்வி வெள்ளை அறிக்கை 1981" இல் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

சேவைக்கு சேர்த்துக் கொள்ள முன்னர் உரிய பயிற்சியைக் கொடுக்காது. கடதாசிக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்து வரையறுக்கப்பட்ட சான்றிதழை மட்டும் கவனித்து ஆட்சேர்த்துக் கொள்ளும் முறை ................ என்று தொடங்குகின்றது"

இதனைத் தொடர்ந்து, தேசிய கல்வி ஆணைக்குழு 1992 ம் ஆண்டு அறிக்கை அத்தியாயம் 6 இவ்வாறு தெரிவிக்கின்றது.

"கடந்த பல ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்ட தெரிவும் நியமனமும் தொடர்பான முறைகள் அதிகளவு அப்போதைய சந்தர்ப்ப சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன....... எனத் தொடங்கி குறிப்பாக ஆசிரியர் நியமனங்களைப் பொறுத்தவரை தெரிவு செய்தலானது மிக முக்கிய சமூக அரசியல் பொருளாதார முக்கியத்துவம் உடையது" என முடிகின்றது.

கல்விக் கொள்கை, கல்வி நிர்வாகம் போன்றவை உயர் மட்டத்தில் உருவாக்கப்பட்டாலும், அவற்றை நடைமுறைப்படுத்துபவர்கள் ஆசிரியர்கள்தான். இதனால் அவர்கள் அச்சாணி போன்று முக்கியத்துவம் பெறுகின்றார்கள். பிள்ளைகளின் கல்வியில் நேரடியாகவும், உடனடியாகவும் தாக்கத்தை ஏற்படுத்துபவர்கள் அவர்களே. இதனால் அவர்களது "தகுதி" வலியுறுத்தப்படுகின்றது.

ஆசிரியர்கள் சமூகத்தின் தலைவர்களாக கருதப்படுகின்றார்கள். இதனால் மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் முன்மாதிரியாக அமையக் கூடிய நடத்தைகளை அவர்கள் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1977 பொதுக்கல்வி சீர்திருத்த பிரரேரணையில் 17th அத்தியாயம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"எங்கள் நாட்டின் கல்வித் தரமானது வேறு தராதரத்திலே தங்கியுள்ளது. என்ற முன்மொழிவோடு 17.13 ம் வாசகத்தில் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களால் பயிற்றப்பட்ட ஆசிரியர்களை மட்டுமே இனிமேல் கல்வி உயர்கல்வி அமைச்சு ஆசிரியர் சேவையில் அமர்த்தும் என்கிறது.

இவைகளில் இருந்து பொதுவாக "ஆசிரியர் தகுதி" முக்கியத்துவம் பெறுவதை நாம் அறிய முடியும்.

## ஆசிரியர் அந்தஸ்து

"ஆசிரியர் அந்தஸ்து" என்ற பதம் காலத்திற்கு காலம் வெவ்வேறு கருத்துப்பட்டதாக அமைகின்றது.

"ஆசிரியர் அந்தஸ்து" என்பதற்கு UNESCO வின் பரீஸ் பிரகடனம் 1966ம் ஆண்டு பின்வருமாறு பொருள் கொண்டுள்ளது.

1. ஆசிரியர் ஆற்றும் பணியின் முக்கியத்துவம் காரணமாக சேவைக்குரிய மரியாதை என்ற அளவு கோலினால் வழங்கப்பட்ட கணிப்பும் அதனைச் செய்யும் போது அவர்களிடம் உள்ள தகுதியும்.
2. தொழிலுக்குரிய வேலை நிபந்தனைகள், வேதனம், பௌதீக நலன்கள் ஆகும்.

ஆசிரியர்களின் அந்தஸ்து உயர்வதற்கும், அதற்கு அடிப்படையாக அவர்களின் உரிமைகள், சலுகைகள் சேவை நிபந்தனைகள் என்பனவற்றிற்கு உத்தரவாதமளிப்பதற்கும் சர்வதேச ரீதியில் பல ஸ்தாபனங்கள் முன்வந்தன. சர்வதேச தொழில் ஸ்தாபனமும் (I.L.O) UNESCO வும் இணைந்து பரீஸ் இல் 1996.10.05 இல் நடாத்திய மகாநாட்டின் இறுதியில் வெளியிட்ட பிரகடனம் "ஆசிரியர் அந்தஸ்து பற்றிய விதந்துரைகள்" என அழைக்கப்படுகின்றது. இப்பிரகடனம் ஆசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டங்களைக் கருத்திற் கொண்டு அவர்களின் அந்தஸ்தினை உறுதிப்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆசிரியருக்கும் வழிகாட்டலாகக் கொள்ள வேண்டிய கருத்துக்களை இப்பிரகடனம் கொண்டுள்ளது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் மனிதவள அணுகுமுறையானது இன்று ஆசிரியரின் முக்கியத்துவத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது. ஆசிரியர்கள் அபிவிருத்திக்கான முதலீடாகவும் கணிக்கப்படுகின்றனர்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் மனிதவள அணுகுமுறையானது இன்று ஆசிரியரின் முக்கியத்துவத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது. ஆசிரியர்கள் அபிவிருத்திக்கான முதலீடாகவும் கணிக்கப்படுகின்றனர்.

உலகில் பல்வேறு தொழில் துறையினர் உயர்தொழில் வகுப்பினர் என அழைக்கப்படுகின்றனர். எடுத்துக் காட்டாக வழக்கறிஞர், மருத்துவர்களைக் குறிப்பிடலாம். சில தொழில் துறையினர் உயர்தரமான அந்தஸ்தை பெற சில விசேடகாரணங்கள் அமைகின்றன.

உலகில் பல்வேறு தொழில் துறையினர் உயர்-தொழில் வகுப்பினர் என அழைக்கப்படுகின்றனர். எடுத்துக் காட்டாக வழக்கறிஞர், மருத்துவர்களைக் குறிப்பிடலாம். சில தொழில் துறையினர் உயர்தரமான அந்தஸ்தை பெற சில விசேடகாரணங்கள் அமைகின்றன.

R.Lewis , H.Monde என்பவர்கள் 1952 இல் செய்த ஆய்வில் உயர் தொழில் புரிபவர்களில், உலகளாவிய ரீதியில் பார்க்கும் போது

| | | |
|---|---|---|
| 1901 | - | 1.12% |
| 1951 | - | 3.36% |
| 1971 | - | 4.44% |

உயர் தொழில் புரிகின்றனர். என்பதை கண்டார்கள். 1951 இற்கு பிறகு ஆசிரியர்களும் இதில் சேர்க்கப்பட்டனர்.

T.H.Marsal என்பவரின் கருத்துப்படி "உயர் தொழில் அந்தஸ்து" எனக் கூறும்போது "தொழில் புரிபவருக்கும், தொழிலை பெறுபவருக்கும் இடையில் ஒரு நெருங்கிய உறவு இருக்க வேண்டும் எனக் கூறுகின்றார்.

பாடசாலைகளில் ஆசிரியருக்கும்- மாணவருக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருப்பதை கொண்டு "ஆசிரியர் தொழில் உயர் அந்தஸ்து" உடையது எனலாம்.

H.L. Wilsnesby என்பவர் 18 உயர் தொழில்களை ஆராய்ந்து, இத்தகைய தொழில்களில் நான்குக்குத் தனிப்பட்ட பண்புகள் உண்டு என்கின்றார். அவை

1. முழுநேர வேலையாக இருத்தல் வேண்டும்.
2. தனிப்பட்ட அறிவுத் தொகுதி, அதில் சேர்க்கப்படவேண்டும். இதற்கு தொடர்ச்சியான ஒரு பயிற்சி தேவை
3. உயர்தொழில் என சட்ட அங்கீகாரம்
4. ஒழுக்கக் கோவை.

வளர்முக நாடுகளில் இந்த நான்கு அம்சங்களும் ஆசிரியர்களுக்கு உண்டு.

ஆகவே "ஆசிரியர் தொழில் உயர் அந்தஸ்து" உடையது.

## ஆசிரியர் ஒரு முகாமையாளர்

முகாமைத்துவக் கல்வியும், பயிற்சியும் தற்போது எல்லா நாடுகளிலும் முக்கியத்துவம் பெறுகின்றது. (பேர்கன் 1988)

பின்வரும் காரணங்களினால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகக் கைத்தொழில் முகாமைத்துவங்களிலிருந்து, கல்வி முகாமைத்துவமானது பல அம்சங்களில் வேறுபட்டது.

1. ஆசிரியர் பாடசாலையில் இலாப நோக்கடிப்படையில் செயலாற்ற முடியாது.
2. கல்வியின் விளைவுகளை அளவிடுவது சிரமம்
3. கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகள் குறிப்பிட்ட ஒரு பாடசாலையில் கூட ஆசிரியருக்கு ஆசிரியர் வேறுபடக் கூடியது.

இவ்வாறு 1985 இல் றஸ்ற் என்பவர் கருதுகின்றார்.

இத்தகைய பல காரணங்களை முன்னிட்டு கல்வி விளைவுகளை அதிகரிப்பதற்கு அதன் முகாமைத்துவம் தொடர்பாக அக்கறை செலுத்த வேண்டியது அவசியமாகின்றது என்பதனை ."சிங்கால் (1989)" தெரிவித்தார்.

ஹன்டி என்பவர் 1986 இல் "உண்மையில் ஒவ்வொரு ஆசிரியரும் குறிப்பிட்ட மாணவர் தொகையினருக்கு ஒரு முகாமையாளரே. வகுப்பறையானது, ஒரு குழு நடத்தையின் சகல சட்டதிட்டங்களும், ஊக்குவித்தல் நுட்பங்களும், தலைமைத்துவமும் தொடர்பாடலும் பிரயோகிக்கப்படவேண்டிய பாடசாலை எனும் தாபனத்தின் சிறு கூறாகும்" என்கின்றார்.

இதனால் "ஆசிரியர் ஒரு முகாமையாளர்" என்ற வாதம் உண்மை பெறுகின்றது.

பொதுவாக முகாமைத்துவமானது ஏழு செயற்பாட்டின் தொடர்பினை உள்ளடக்கியது.

1. பகுத்தாய்தல்
2. திட்டமிடல்
3. ஒழுங்கமைத்தல்
4. நெறிப்படுத்தல்
5. கட்டுப்படுத்தல்
6. இயைபுபடுத்தல்
7. மதிப்பிடல்

ஆகிய ஏழு தொழிற்பாடுகளும் கல்வி விளைவுகளை மேம்படுத்துவதற்காகப் பாடசாலைகளில் கையாளப்படுகின்றன.

இதற்கு ஆதாரமாகப் பின்வரும் ஆய்வாளர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியம்.

டேவிட் (1984) என்பார், "ஆசிரியர்கள் தலைவர்களாகவும், அபிவிருத்தியாளர்களாகவும், முதல் நிரை முகாமையாளர்களாகவும், மேற்பார்வையாளர்களாகவும் மட்டுமன்றி ஆளணி முகாமையாளராகவும் இருத்தல் வேண்டும்" என்கிபதை அறியமுடிகின்றது.

"ஹாகிறீவ்ஸ்" இன் கருத்துப்படி "சுய அபிவிருத்தியை ஏற்படுத்த, ஆசிரியர்கள் தங்களைத் திட்டமிடுவோராகக் கருத வேண்டும். அத்துடன் தவறுகளைத் திருத்திக் கொள்ளும் மனப்பான்மையும் கொண்டிருக்க வேண்டும்" என்கிறார்.

பொதுவாகப் பாடசாலைகளில் திருப்தியற்ற செயற்பாடுகளுக்கு பல காரணங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. அவை ஆசிரியர் ஒருவர்

1. தமது பாடப்பரப்பில் போதிய அறிவின்றிருத்தல்
2. தமது தொடர்பாடலில் குறைபாடு
3. தமது கருமத்தை முடிக்க இலக்கு இல்லாதிருத்தல்
4. தமது செயற்பாட்டில் திட்டமிடல் இல்லதிருத்தல்.
5. நல்லொழுக்கத்தை நிலை நாட்டத் திறமையின்மை
6. கல்வி அடைவினை ஏற்படுத்தத் தேவையான தகுதி குறைவாக இருத்தல்.
7. வளப்பற்றாக்குறைக்கு ஏற்ப தம்மை இணக்கப்படுத்திக் கொள்ளாத நிலை

என்பவற்றை உள்ளவாக இருத்தலாகும்இத்தகைய நிலைகளில் இருந்து மீட்சி பெறுவதற்கு "ஆசிரியர் ஒரு முகாமையாளர்" என்ற கருத்திற்கமை முகாமைத்துவக் கோட்பாடுகளை நன்கு அறிந்திருக்க வேண்டிய பொறுப்பு ஒரு ஆசிரியருக்கு உண்டு.

## முடிவுரை

ஒரு பாடசாலையில் ஒரு ஆசிரியர் பின்வரும் தொடர்புகளைக் கொண்டிருக்கின்றார்.

அதிபர்

↑

மாணவர் ← ஆசிரியர் → சமூகம்

↓

ஆசிரியர்

இத்தொடர்புகளின் மூலம் நிறைவான செயற்பாடுகளை செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு ஆசிரியருக்கு உண்டு.

ஒரு மாணவரை தான் நினைத்த வடிவில் மாற்றும் திறமை உள்ள இந்த ஆசிரியர் பெருமைக்குரியவர். இதனால்தான் முன்னோர்கள் "எழுத்தறிவித்தவன் இறைவன்" எனக் கண்டார்கள்.

பெற்றோரைக் காட்டிலும் பல பாத்திரங்களை எடுக்க வேண்டிய ஒரு ஆசிரியர், தமது கடமையை நன்கு உணர்ந்து, தமது அந்தஸ்துகளுக்கு ஏற்ப, நல்ல முகாமையாளராக இருந்தால் மாணவர் சமூகம் உயர்வு பெறும். அதன் மூலம் நாடு நிறைவு காணும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கலைத்திட்ட சீராக்கம் - 2007

1998-1999ல் இருந்து இலங்கையில் அமுலாக்கப்பட்டு வந்த புதிய கல்விச் சீர்திருத்தம் (Educational reform) தற்போது நடைமுறையில்இருந்து வருகின்றது. ஆரம்பப் பிரிவுகளிலும், இடைநிலைத் தரங்களிலும், உயர்தரத்திலும் இந்தச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இச்சீர்திருத்தங்களின் பண்புரீதியான (Quality) நன்மை தீமைகள் பற்றி இடைக்கால மீளாய்வு (review) ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இம் மீளாய்வில் இடைநிலைத் தரங்களில் (Secondary Level 6-11 ) எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றினை அல்லது சீர்திருத்தங்கள் வலுவான மாற்றத்தினை ஏற்படுத்தவில்லை என ஆய்வில் ஈடுபட்டவர்கள் எடுத்துக் கூறியுள்ளனர். கலைத்திட்ட, கல்விச் சீராக்க வேலைகளில் உயர்நிலையிலிருக்கும் தேசிய கல்வி நிறுவனத்திற்கும் (NIE) இத்தகையவொரு அபிப்பிராயம் காணப்படுகின்றது. இக்காரணத்தினால் 2007ஆம் ஆண்டில், பாடசாலைகளில் கலைத்திட்ட அமுலாக்கலுக்குப் பொறுப்பான தே.க.நிறுவகம் சிறப்பாக இடைநிலைத் தரங்களில் கலைத்திட்ட சீராக்கமொன்றினை அமுலாக்குவதற்கான வேலைத்திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றது. இக்கட்டுரையாசிரியர் அது தொடர்பான தனது செயலமர்வு அனுபவங்களை இக்கட்டுரையில் பகருகின்றார்.

*A.C.George*
*Zonal Education office*
*Jaffna*

1998-1999ல் இருந்து இலங்கையில் அமுலாக்கப்பட்டு வந்த புதிய கல்விச் சீர்திருத்தம் (Educational reform) தற்போது நடைமுறையில் இருந்து வருகின்றது. ஆரம்பப் பிரிவுகளிலும், இடைநிலைத் தரங்களிலும், உயர்தரத்திலும் இந்தச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இச்சீர்திருத்தங்களின் பண்புரீதியான (Quality) நன்மை தீமைகள் பற்றி இடைக்கால மீளாய்வு (review) ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இம் மீளாய்வில் இடைநிலைத் தரங்களில் (Secondary Level (6-11) ) எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றினை அல்லது சீர்திருத்தங்கள் வலுவான மாற்றத்தினை ஏற்படுத்தவில்லை என ஆய்வில் ஈடுபட்டவர்கள் எடுத்துக் கூறியுள்ளனர். கலைத்திட்ட, கல்விச் சீராக்க வேலைகளில் உயர்நிலையிலிருக்கும் தேசிய கல்வி நிறுவனத்திற்கும் (NIE) இத்தகையவொரு அபிப்பிராயம் காணப்படுகின்றது. இக்காரணத்தினால் 2007ஆம் ஆண்டில், பாடசாலைகளில் கலைத்திட்ட அமுலாக்கலுக்குப் பொறுப்பான தே.க.நிறுவகம் சிறப்பாக இடைநிலைத் தரங்களில் கலைத்திட்ட சீராக்க மொன்றினை அமுலாக்குவதற்கான வேலைத்திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றது. இக்கட்டுரையாசிரியர் அது தொடர்பான தனது செயலமர்வு அனுபவங்களை இக்கட்டுரையில் பகருகின்றார்.

2007 ஆம் ஆண்டிற்கான கலைத்திட்ட சீராக்கத்திற்காகத் தேசிய கல்வி நிறுவகம் மூன்று கலைத்திட்ட தூர நோக்கினை தனது தொடுவானமாகக் கொண்டுள்ளது. (Three Curriculum Vision) நாம் எங்கே போக வேண்டும்! (Where we want to go?) என்ற வினாவினை எழுப்பி, தற்போதைய கலைத்திட்டமானது பின்வரும் மூன்று விடயங்களை தனது நோக்காகக் கொண்டுள்ளது.

* அறிந்தவற்றைப் பாதுகாத்தல். (retaining the know)
* ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டவற்றை பேணுவோம் (Learning the Predetermined)?
* இருப்பதினை கட்டி எழுப்புதல் (Construct what is)?

ஆனால் 2007ம் பாடசாலைகளில் அமுலாக்கப்படவுள்ள கலைத்திட்டச் சீராக்கமானது பின்வரும் மூன்று விடயங்களில் தனது தூரநோக்கத்தினைக் கொண்டுள்ளது.

* தெரிந்தவற்றை மாற்றியமைப்போம் (Revising the know )
* தீர்மானிக்கப்படாதவற்றை மேலும் ஆய்வு செய்வோம் (Exploring the undetermine)
* கட்டி எழுப்பப்பட வேண்டியவை காலத்திற்குத் தேவையானதாக இருத்தல். (Construct what is to be)

இம்மூன்றும் தேசிய கல்வி நிறுவனத்தின் 2007ம் ஆண்டிற்கான கலைத்திட்ட சீராக்கல் தூர நோக்கின் மூன்று தூண்களாகும். (Three Pillars of Curriculum Vision)

இக்கலைத்திட்டமானது பாடத்திட்டம், ஆசிரியர் பணி, கற்றல் கற்பித்தல் செயற்பாடு கணிப்பீடும் மதிப்பீடும் பற்றிய பிரதான விடயங்களில் சீராக்கம் செய்யப்படவுள்ளது. சீராக்கத்தின் போது கலைத்திட்டத்தினை இலகுவாக அமுலாக்கும் பொருட்டு கலைத்திட்ட வழிகாட்டி ஒன்று பாட ஆசிரியர்களுக்கு வழங்கப்படும். (Course guide) இவ் வழிகாட்டி மூன்று பகுதிகளைக் கொண்டு இருக்கும். முதற் பகுதி விரிவான பாடத் திட்டத்தினையும், இரண்டாம் பகுதி ஆசிரியரால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாட்டுத் தொகுதியினையும் (Series of activity) மூன்றாம் பகுதி கணிப்பீடு, மதிப்பீடு பற்றிய விடயங்களையும் கொண்டு இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2007ல் அமுலாகும் கலைத்திட்ட சீராக்கம் பாடசாலைகளில் மூன்று மட்டங்களில் (Levels) அமுலாகும். தரம் 6, தரம் 10, தரம் 12, இதில் தரம் ஆறிற்கான கலைத்திட்ட சீராக்கம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு 2007ல் புதுப் பொலிவு பெறும். தரம் ஆறில் புதிய கல்விச் சீரமைப்பிற்கு ஏற்ப விஞ்ஞானம், வாழ்க்கைத் தேர்ச்சிகள், புவியியல் தனிப்பாடங்களாகப் போதிக்கப்படும்.

இடைநிலைத் தரத்தில் தரம் 10, 11ல் குறிப்பிடத்தக்க கலைத்திட்ட மாற்றங்கள் 2007ல் இடம் பெறவுள்ளன. 2008ல் G.C.E சாதாரண தர மாணவர் இக்கலைத்திட்டத்திற்கு அமைவாகவே பரீட்சைக்குத் தோற்றுவர். அப்போது தேசிய மட்டப் பரீட்சையும் தற்போது இடம் பெறும் வடிவில் இடம் பெற மாட்டாது, எனக் கூறப்படுகின்றது. தரம் 10லும் 11லும் அமுலாக்கப்படவுள்ள கலைத்திட்டமானது பிள்ளைகள் இனி .10 பாடங்களைக் கற்க வேண்டியிருக்கும். இப்பத்து பாடங்களில் 5 பாடங்கள் கட்டாயமானது. (Core Subject) அவையாவன.

* சமயம்
* சிங்களம் / தமிழ்
* கணிதம்
* ஆங்கிலம்
* வரலாறு

புதிய கலைத்திட்டம் பாடத்திட்டம், ஆசிரியர் பணி, கற்றல் கற்பித்தல் செயற்பாடு கணிப்பீடும் மதிப்பீடும் பற்றிய பிரதான விடயங்களில் சீராக்கம் செய்யப்படவுள்ளது. சீராக்கத்தின் போது கலைத்திட்டத்தினை இலகுவாக அமுலாக்கும் பொருட்டு கலைத்திட்ட வழிகாட்டி ஒன்று பாட ஆசிரியர்களுக்கு வழங்கப்படும். *(Course guide)* இவ் வழிகாட்டி மூன்று பகுதிகளைக் கொண்டு இருக்கும். முதற் பகுதி விரிவான பாடத்திட்டத்தினையும், இரண்டாம் பகுதி ஆசிரியரால் நிறைவேற்றப்படவேண்டிய செயற்பாட்டுத் தொகுதியினையும் *(Series of activity)* மூன்றாம் பகுதி கணிப்பீடு. மதிப்பீடு பற்றிய விடயங்களையும் கொண்டு இருக்கும்.

கட்டாய 5 பாடங்களில் வரலாற்றுப் பாடம் அனைவராலும் கற்கப்படவேண்டிய பாடமாக இடம் பெற்றுள்ளது. ஏனைய ஐந்து பாடங்களும் மூன்று வேறு வேறான பாடக்கூடைகளிலிருந்து (Baskets of Subjects) விருப்பு அடிப்படையில் தெரிவு செய்யப்பட வேண்டும். (The Curriculum will be reoganized to have a core and baskets of subjects from which options are selected)

பாடக் கூடைகள் இரண்டும் மூன்றும் முறையே அழகியல்பாடக் கூடையாகவும், தொழில் நுட்பப் பாடக்கூடையாகவும் காணப்படுகின்றன.

தரம் 12,13 இலும் சில மாற்றங்கள் புகுத்தப்படவுள்ளன. தற்போதைய மூன்று பாடத்தெரிவு முறை நீடிக்கும். ஆனால் 2007ல் பரீட்சை வினாத்தாள் நேரம் போன்றவற்றில் மாற்றங்கள் கொண்டு வரப்படும், மேலும் 2007ல் ஆங்கிலம் (General English) கட்டாயபாடமாக மாற்றப்படும். பொது சாதாரணப் பத்திரமும் (General Common Paper) தொடர்பாடல் சார்ந்த திறன் (Communication Skill) திறனாய்வு சார்ந்த திறன் (Critical think-

**விருப்பத்திற்குரிய மூன்று பாடக் கூடைகளாவன.**

| பாடக்கூடை (1) | பாடக்கூடை (2) | பாடக்கூடை (3) |
|---|---|---|
| 1. பௌதீகவியல் | 1. சித்திரம் | 1. தகவல் தொழில்நுட்பம்(InformationTech) |
| 2. இரசாயணவியல் | 2. நடனம் | 2. Agriculture Food Techrnologs |
| 3. உயிரியல் | 3. சங்கீதம் | 3. Fisheries & Food tachnology |
| 4. பொது விஞ்ஞானம் | 4. நாடகமும் அரங்கியலும் | 4. Design and Tachnology |
| 5. புவியியல் | 5. இலக்கியம் | 5. Arts and Crafts |
| 6. குடியியலும் அரசாட்சியும் (Civics & Governance) | 6. அரபிக்மொழி | 6. Home Economic |
| 7. வணிகக் கல்வி, கணக்கீடு, | முயற்சியாண்மை | 7. Speed Writing and word processing & Document Production |
| 8. புராதன நவீன மொழிகள் (Clasical & Modern Languages பாளி, சமஸ்கிருதம், ஜெர்மன், ஹிந்தி, யப்பானிய மொழி, | | 8. Health and Physical Education |
| 9. சிங்களம் / தமிழ் (இரண்டாம் மொழியாக) | | 9. Media and Communication |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ing) போன்றவற்றை உள்ளடக்கும் விதத்தில் வினாப்பத்திரம் மாற்றியமைக்கப்படும். கலை, வணிக பாடத்துறையை சேர்ந்தோர்க்கு 2007 இல் தொழில்நுட்பப் பாடங்கள் அறிமுகம் செய்யப்படும்.

அதாவது பின்வரும் பாடங்கள் கற்பிக்கப்படும்

* Agro Technology
* Civil Technology
* Bio resource Technology
* MechanicalTechnology
* Food Technology
* Electrical, Electronic and information Technology

மேற்கூறிய வகையில் 2007ஆம் ஆண்டிற்கான கலைத்திட்ட சீராக்கங்கள் இடம் பெறவுள்ளன.

இச்சீராக்கக்கங்கள் கீழ்வரும் அடிப்படை இலக்குகளை மையமாகக் கொண்டு அமுலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

* பிள்ளைகளின் தேர்ச்சியை விருத்தி செய்தல்,
* செயற்பாட்டு ரீதியான கற்றல் (Activity based learning)
* பிள்ளைகளிடம் ஆக்கத்திறன், படைப்பாற்றல் ஆய்தறியும் திறன், சமூகத்திறன்கள் (Social Skills) கற்பனைத் திறன்கள் என்பனவற்றை வழங்குதல்

கற்றல் மகிழ்ச்சிக்குரியதாகவும் (Child friendly environment) அழுத்தங்களைத் தராததாகவும் (Free of stress) அமையும் விதத்திலும், கலைத்திட்டமானது (Key learning, concepts without over loading children with factual details) அடிப்படையில் வழங்கப்படும்.

இக்கலைத்திட்ட சீராக்கலில் ஆசிரியருடைய பணியும் மாற்றமடைகின்றது. ஆசிரியர் பணியானது வழங்குதல், பரிமாறுதல் (Transmission, and Transaction) என்ற வகையில் இருந்தது. இப்பணியானது நிலை மாற்றுதல் (Transfomation) என்ற வடிவத்திற்கு புதிய கலைத்திட்ட சீராக்கத்தில் மாற்றியமைக்கப் படுகின்றது. ஆசிரியர் வகிபாகம் ஒரு வளவாளர் நிலைக்கும். மாணவனை நிலைமாற்றும் நிலைக்கும் மாற்றப்பட வேண்டும். இதற்காக ஆசிரியர் பணி மேலும் வினைத்திறனாக்கப்படவுள்ளது.

**ஆசிரியரின் நடிபங்கு நிலைமாற்றல் நிலைக்கு மாற்றமடைவதினால் அவர் புதிய கலைத்திட்டத்தில் பிள்ளைகள் தேர்ச்சியினை பெறத்தக்கதாக ஒரு வளவாளராக நிலைமாற்றமடைவார். முழுக்கற்றல் செயற்பாட்டையும் அனுபவம் மூலம் வழங்கி வெற்றி பெற வைப்பார். குறித்த திறனை அடைவதற்காக மாணவனை பயிற்றுவித்தல், குறித்த பாடத்திலுள்ள அவசியமான தத்துவங்களையும் நுட்பங்களையும் செய்முறை நிலையில் பிரயோகிகக்கூடிய ஆற்றலை அளித்தல், இதனை வாழ்க்கையில் செயல்படுத்தல் என்ற அடிப்படையில் பிள்ளைகள் தேர்ச்சினை பெறும் வகையில் ஆசிரியரின் நடிபங்கு மாற்றமடைவதினை 2007 கலைத்திட்ட சீராக்கம் வலியுறுத்துகின்றது.**

ஆசிரியரின் நடிபங்கு நிலைமாற்றல் (Transfomation role) நிலைக்கு மாற்றமடைவதினால் அவர் புதிய கலைத்திட்டத்தில் பிள்ளைகள் தேர்ச்சியினை பெறத்தக்கதாக ஒரு வளவாளராக நிலைமாற்றமடைவார். முழுக்கற்றல் செயற்பாட்டையும் அனுபவம் மூலம் வழங்கி வெற்றி பெற வைப்பார். குறித்த திறனை அடைவதற்காக மாணவனை பயிற்றுவித்தல், குறித்த பாடத்திலுள்ள அவசியமான தத்துவங்களையும் நுட்பங்களையும் செய்முறை நிலையில் பிரயோகிக்கக்கூடிய ஆற்றலை அளித்தல், இதனை வாழ்க்கையில் செயல்படுத்தல் என்ற அடிப்படையில் பிள்ளைகள் தேர்ச்சினை பெறும் வகையில் ஆசிரியரின் நடிபங்கு மாற்றமடைவதினை 2007 கலைத்திட்ட சீராக்கம் வலியுறுத்துகின்றது. பிள்ளைகளுக்கு ஆசிரியர் இதுவரையும் அறிவு, திறன், மனப்பாங்கு என்பனவற்றை வழங்கினர். ஆனால் அதனை life long Practice ஆக பயன்படுத்தவில்லை. இதனால் ஆசிரியர் இனி KASP மாதிரியினை பின்பற்றுவார்.

K - அறிவு
A -மனப்பாங்கு
S - திறன்
P - பயிற்சி

இது கற்பித்தல் முறையிலும் கற்றல் முறையிலும் மாற்றத்தினை வேண்டி நிற்கும். கஸ்ப (KASP) முறையில் ஆசிரியரின் நடிபங்கு அமைவதினால் படிமுறையான ஒரு திட்டமிடலை தனது பணியின் போது மேற்கொள்வார். திட்டமிடல் கற்பித்தலின் உயிர்ப்பான மூலமாக விளங்கும். இதற்காக இன்று வழங்கல், பரிமாற்றம், என்ற வகிபாகத்தினை வகிக்கும் ஆசிரியர் நாளை நிலைமாற்றல் (Transfomation) வகிபாகத்தினை வகிப்பதற்காக தனது தற்போதைய திட்டமிடல் முறையினை மாற்றியமைப்பார்.

அத்தகையதோர் திட்டமிடல் Activity Lesson Plan எனப்படும். இந்தச் செயற்பாட்டு பாடத்திட்டமிடல் "5 E Model" என அழைக்கப்படும். ஆசிரியர் தனது வகுப்பறை செயற்பாட்டினை 5E Model லில் அமைப்பார். இந்த மாதிரி செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டது. வேறுவகையில் கூறினால் தற்போதைய lesso plan (பாட முன்னாயத்தம்) Activitity lesson Plan என்ற வடிவில் மாறும். அது "5E Model" லில் எழுதப்படும்.

5E Model என்பது 5Eயில் தொடங்கும் ஆங்கில எழுத்துக்களால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படும் மாதிரியாகும். அவையாவன

(1) Engagement (ஈடுபட வைத்தல்)

(2) Exploration (ஆர்வத்துடன் ஆராய்தல்)

(3) Explanation (விளக்குதல்)

(4) Elabration (விரிவாக்குதல்)

(5) Evaluation and Assesment
(மதிப்பீடும், கணிப்பீடும்)

ஆசிரியர் ஒருவர் 2007ல் பாட அலகு ஒன்றினைத் திட்டமிடும் போது Competency base and Competency level அடிப்படையில் செயற்பாட்டு பாடத்திட்டமிடல் அமையும். இது தற்போதைய 40 நிமிட பாட வேளைக்கு அமைக்கப்படுவது போல் அமையாது தேர்ச்சி மட்டமொன்றிற்கு அமைவாக திட்டமிடப்படும். அச்சந்தர்ப்பத்தில் 120 நிமிடங்களுக்கான பாட அலகுத்திட்டமிடலாகவும் இருக்க வேண்டும்.

2007ல் ஒரு ஆசிரியரால் வகுப்பறையொன்றில் தற்போது திட்டமிடப்படும் lesson plan (பாடக்குறிப்பிற்குப்) பதிலாக தயாரிக்கப்படவேண்டிய Activity lesson plan model கீழ்வரும் அடிப்படையில் அமையும்.

செயற்பாட்டு மாதிப்படிவம்
(Activity lesson plan model)

தேர்ச்சி :-

தேர்ச்சி மட்டம் :-

செயற்பாடு:-

நேரம் :-

தர உள்ளீடு :-

கற்றல் கற்பித்தல் செயற்பாடு :-

(1) Engagement:-

(2) Exploration:-

(3) Explanation:-

(4) Elaboration :-

(5) Evalvation & Assesment :-

எனவே தேசிய கல்வி நிறுவகத்தில் 2007ற்கான கலைத்திட்ட சீராக்கத்தின் மூலம் ஆசிரியருடைய வகிபாகம் மாற்றமடைவதுடன் பிள்ளைகள் தேசிய கல்வி நிறுவகத்தின் தூர நோக்கினை அடைவதற்கான செயற்பாட்டு சார்ந்த கற்றல் கற்பித்தல் பணிகளிலும் ஈடுபடுவர்.

---

"இங்கு பெண்ணுக்கான வாழ்வியல் என்பது குடும்பத்தால், கலாசாரத்தால் மொழியால், சமயத்தால், சாதியால், அரசியலால், விஞ்ஞானத்தால் வரையறை செய்யப்பட்டும் கண்காணிப்பிற்கு உட்பட்டும் ஆண் மேலாண்மை சமூகத்தால் பழக்கப்படுத்தப்பட்ட மனித விலங்காக மாற்றப்பட்டு 'தான்' பிரக்ஞையோ, தனி அடையாளமோ இல்லாமல் அழிக்கப்பட்டுள்ளது"

மாலதி மைத்ரி,
விடுதலை எழுதுதல், பக் 79, 2004"

---

நாட்டின் வறுமையிலிருந்து தப்புவதற்கான வழி கல்வி அன்று; வறுமையை எதிர்த்துப் போராடுவதற்கான வழியே கல்வி

ஜுலியஸ் நைரேரே
(தன்சானியாவின் முதல்குடியரசுத்தலைவர்)

*****

21ம் நூற்றாண்டின் எழுத்தறிவுள்ளவர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக இருக்க மாட்டார்கள், கற்க முடியாதவர்களாக, படிப்பை மறந்தவர்களாக, மீண்டும் கற்க முடியாதவர்களாக இருப்பார்கள்.

-ஆல்வின் டேனஃப்ளர்-
அமெரிக்க எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றம் காணும் உலகுடன் இணைதல்: கல்வியற் கண்ணோட்டம் ஒன்றுக்கான அறிமுகம்

**வாழ்நாட்கல்வியானது, மனித வாழ்வின் தரமேம்பாட்டை உறுதி செய்ய வேண்டும். குடும்ப உறவில், பிற தொடர்புகளில், உடல், உள நலத்தில், உடல், உளச் சமநிலை பேணலில் என யாவற்றிலும் ஆரோக்கியம் காண விழைதல் தரமேம்பாட்டுக்கான உறுதிப்பாட்டை மேம்படுத்தும். தனியாள் சார்ந்த நலம், சமூகம் சார்ந்த நலம், புவிக்கோளம் சார்ந்த நலம் என்பன யாவும் இணைந்தே மனித வாழ்வின் வெற்றியைத் தீர்மானிக்கும். எனவே, இதன் அடிப்படையில் பாடசாலைகளுக்கான புதிய உருவக மொன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டியதும் அவசியமாகின்றது.**

கலாநிதி த.கலாமணி
சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ். பல்கலைக்கழகம்

உலகு மாற்றம் காண்பது. உலகோடு ஒட்ட ஒழுகல் மனித முன்னேற்றத்திற்கான ஒரு வழி. இன்று உலகியல் மாற்றங்கள் மிகத்துரிதமாக இடம்பெற்று வருகின்றன. மனித சிந்தனா விருத்தி, அதன் பேறான விஞ்ஞான - தொழிநுட்ப வளர்ச்சி, இலத்திரனியற் சாதன விருத்தி என்பன உலகியல்சார் நடவடிக்கைகளில் பாரிய மாற்றங்களை விளைவித்துள்ளன. இப்பின்னணியில் நோக்கின் குறிப்பான சில நிலைமைகள் கவனத்துக்குரியனவாகின்றன:

* எமது பிள்ளைகள் இனிமேலும் தமது வாழ்நாள் முழுவதும் ஒரே சுற்றுச் சூழலில் வளரப் போவதில்லை; ஒரே குடும்ப உறவினர்களைக் கொண்டிருக்கப் போவதில்லை; ஒரே தொழிலைப் புரியப்போவதில்லை.

* இன்று பாடசாலைகளில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்கள் தமது பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டு ஈடுபடப்போகின்ற தொழில்களில் அரைவாசிக்கு மேற்பட்டவை இன்னமும் உருவாக்கப்படவில்லை.

* ஒரு சில வருடங்களிலேயே அறிவியமானது (knowledge) இரட்டிப்பாகிக் கொண்டு செல்கின்ற நிலைமையான 'அறிவு வெள்ளப் பிரவாகம்' (Knowledge Explosion) காரணமாக, காலாவதியாகும் அறிவியத்தைப் புதுப்பிக்க வேண்டியதாயிற்று.

* மக்கள் அதிகரித்த அளவில் பயணம் செய்வதோடு, தொழில்களிலும் மாறிக்கொண்டு, தொலைத்தொடர்புச் சாதனங்களினூடாகச் சர்வதேச ரீதியான தொடர்புகளையும் பேணிக் கொள்கின்றார்கள்.

* பிற கலாசாரங்களுடனும் விழுமியங்களுடனும் மக்கள் ஊடாட்டம் கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

இம்மாற்றங்களுடன் ஒட்டியதாக பாடசாலைக்கல்வியின் நோக்கமும் இன்று மாறவேண்டியதாயுள்ளது. எவ்வாறு கற்றுக்கொள்வது எனக் கற்றுக் கொள்ளவும் (To learn how to learn / Learning to learn) கற்றலை நேசிக்கவும் பிள்ளைகளுக்கு உதவியளிப்பதை நோக்கமாகக் கொள்வதோடு பாடசாலைகள் அவற்றை உறுதி செய்ய வேண்டியதும் அவசியமாகியுள்ளது. இந்நோக்கில் பாடசாலைக் கல்வியை முடித்து இளந்தலைமுறையினர் வெளியேறுகின்ற காலத்தில் வாழ்க்கை நீடித்த கல்விநோக்கி, வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டியவர்களாகத் தம்மைத் தயார் செய்து கொள்ள உதவுவதும் பாடசாலைகளின் கடமையாகின்றது.

வாழ்நாட்கல்வியானது (Lifelong learning), மனித வாழ்வின் தரமேம்பாட்டை உறுதி செய்ய வேண்டும். குடும்ப உறவில், பிற தொடர்புகளில், உடல் /உள நலத்தில், உடல் / உளச் சமநிலை பேணலில் என யாவற்றிலும் ஆரோக்கியம் காண விழைதல் தரமேம்பாட்டுக்கான உறுதிப்பாட்டை மேம்படுத்தும். தனியாள் சார்ந்த நலம், சமூகம் சார்ந்த நலம், புவிக்கோளம் சார்ந்த நலம் என்பன யாவும் இணைந்தே மனித வாழ்வின் வெற்றியைத் தீர்மானிக்கும். எனவே, இதன் அடிப்படையில் பாடசாலைகளுக்கான புதிய உருவகமொன்றை (a new metaphor) உருவாக்கிக் கொள்ள வேண்டியதும் அவசியமாகின்றது.

கல்வியைப் பொறுத்தவரையில், உலகியல் மாற்றங்களைச் சார்ந்து காலத்துக்குக் காலம் அது மீள்கட்டமைப்புச் செய்யப்பட்டே வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயயுகம், கைத்தொழில்யுகம், சமூகயுகம், இலத்திரனியல் யுகம் என முக்கியமான நான்கு அவத்தை நிலைகளினூடாக உலகு மாற்றம் பெற்று வந்துள்ளவேளை, பாடசாலைக் கல்வியின் நோக்கங்களும் கட்டமைப்புகளும் கூட மாற்றம் பெற்றே வந்துள்ளன. முன்னைய மூன்று யுகங்களிலும் முறையே சனசமூக நிலையங்களாக, தொழிற்சாலைகளாக, மருத்துவ மனைகளாக, பாடசாலைகள் உருவகம் செய்யப்பட்டன. ஆனால் இன்றைய இலத்திரனியல் / சூழலியல் யுகத்தில் - தகவற் தொழில்நுட்பயுகத்தில் - இந்நிலை மாறி, கூட்டிணைந்த கற்போர் சமுதாயங்களாக , அதாவது, ஒன்றிணைந்த அறிவார்ந்த சமுதாயங்களாக (Collaborative learning Society) பாடசாலைகள் உருவகிக்கப்படுகின்றன. ஒன்றிணைந்த அறிவார்ந்த சமுதாயங்களாக உருவகிக்கப்படும் பாடசாலைகள் புவிக்கோளத்துடன் இணைந்து, கற்றலும் விருத்தியிலும் ஈடுபடவேண்டியுமுள்ளன.

விவசாய யுகத்தில் பொதுக்கலாசாரத்தையும் குடியுரிமையையும் முன்னேற்றுதலும், கைத்தொழில் யுகத்தில் குடியேற்றவாசிகளை அமெரிக்கமயப்படுத்தி கைத்தொழிற் சமுதாயத்துக்கான தொழிலாளர்களாகத் தயார் செய்தலும், சமூகயுகத்தில் எல்லாக் குழந்தைகளினது தேவைகளையும் நிறைவேற்றுவதற்கான சமூகச் சீர்திருத்தமும் பாடசாலைக் கல்வியின் நோக்கங்களாக இருந்தன. ஆனால், இன்றைய தகவற் தொழிற்நுட்ப யுகத்தில், எவ்வாறு கற்றுக் கொள்வதெனவும் வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டேயிருப்பதை எவ்வாறு நேசிப்பதெனவும் கற்றுக் கொடுப்பதே பாடசாலைகளின் நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது.

விவசாய யுகத்தில் பொதுக்கலாசாரத்தையும் குடியுரிமையையும் முன்னேற்றுதலும், கைத்தொழில் யுகத்தில் குடியேற்றவாசிகளை அமெரிக்க மயப்படுத்தி (Americanization) கைத்தொழிற் சமுதாயத்துக்கான தொழிலாளர்களாகத் தயார் செய்தலும், சமூக யுகத்தில் எல்லாக் குழந்தைகளினது தேவைகளையும் நிறைவேற்றுவதற்கான சமூகச் சீர்திருத்தமும் பாடசாலைக் கல்வியின் நோக்கங்களாக இருந்தன. ஆனால், இன்றைய தகவற் தொழிற்நுட்ப யுகத்தில், எவ்வாறு கற்றுக் கொள்வதெனவும் வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டேயிருப்பதை எவ்வாறு நேசிப்பதெனவும் கற்றுக் கொடுப்பதே பாடசாலைகளின் நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது.

இதேபோல, மாணவர்கள் பற்றிய பார்வையும் இன்று மாற்றம் பெற்றுள்ளதையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். விவசாய யுகத்தில் கருதப்பட்டதுபோல மாணவர்கள் சமூகமயமாக்கப்படவேண்டிய, ஒன்றுமே அறியாத தொடக்க நிலையாளர்கள் (neophytes) அல்லர்; கைத்தொழில் யுகத்தில் கருதப்பட்டதுபோல, தரப்படுத்தல், சோதித்தல், தரக்கட்டுப்பாடு என்பவற்றுக்குட்படுத்தப்படும், விளைபொருட்களாக மாற்றப்பட வேண்டிய மூலப்பொருட்கள் அல்லர் ; சமூக யுகத்தில் கருதப்பட்டதுபோன்று சமூக, காலாசரத் தேவைகளின் பால் இழைக்கப்படும் சமூக அநீதிகளால் துயருற்றுக் காணப்படும் நிலையிலிருந்து பாதுகாப்பளிக்கப்பட வேண்டிய காயமுறக் கூடியவர்களும் (Vulnerable) அல்லர். இன்றைய இலத்திரனியல் யுகத்தில், அறிவியத்தைத் தேடிக் கண்டறிந்து அதனைக் கட்டியெழுப்பிக் கொள்வதோடு அறிவியத்தின் உற்பத்தியாளர்களாகவும் வாடிக்கையாளர்களாகவும் விளங்குபவர்கள் மாணவர்கள் ஆவர்.

மாணவர்கள் பற்றிய இச் சிந்தனை மாற்றத்துடன் இணைந்தாய் ஆசிரியர்கள் பற்றிய பார்வையும் இன்று மாற்றம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. விவசாய யுகத்தில் - சேவைக்காக அழைக்கப்பட்ட புனிதமான தொழில் புரிவோரே ஆசிரியர்கள் என்ற நிலைமாறி, கைத்தொழில்யுகத்தில் - தரமான உற்பத்திப் பொருட்களின் / விளைபொருட்களின் உருவாக்கத்தில் மேற்பார்வையாளர்களாக விளங்குபவர்கள் ஆசிரியர்கள் என்ற நிலையையும் கடந்து, சமூக யுகத்தில் - காயமுற்றவர்களுக்கான பராமரிப்பாளர்களாக நோக்கப்பட வேண்டியவர்களே ஆசிரியர்கள் என்ற பார்வையும் தாண்டி, இன்றைய இலத்திரனியல் யுகத்தில் -வசதி ஏற்பாட்டாளராகவும் (Facilitator) பயிற்சி அளிப்பாளராகவும்(Coach) ஆசிரியர்கள் கொள்ளப்பட வேண்டும். இதேவேளை, பாடசாலைக்கான வளங்களைப் பெற்றுத் தரும் தரகர்களாகவும் சமுதாயத்துடன் பாடசாலையை இணைக்கும் இணைப்பாளர்களாகவும் கொள்ளப்பட வேண்டியவர்களே கல்வி நிர்வாகிகள் என்ற கருத்து நிலை மாற்றச் சிந்தனையையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

'ஒன்றிணைந்து அறிவார்ந்த சமுதாயமே இன்றைய பாடசாலைகள்' என்ற உருவகத்தை நாம் அங்கீகரிப்பின், பாடசாலைகளின் அடித்தளமாக விளங்க வேண்டியது ஒன்றிணைவு / கூட்டிணைவு (Collaboration) ஆகும். ஒரு சிலருக்கு மட்டும் வழங்கப்படுகின்ற அதிகாரமும் போட்டியும் போல அல்லாமல் பங்காண்மையும் பகிரப்படும் தலைமைத்துவமுமே (Partnership & Shared Leadership) கூட்டிணைவின் பொருளாகும். கூட்டிணைந்த அறிவார்ந்த சமுதாயத்தின் மையநோக்கு (Focus) கற்றுக் கொள்ளல் (learning) என்பதாகும். மாணவர்கள் தமது கற்றல் பற்றி செயலூக்கத்துடன் செயல்விளக்கமளிப்பதைச் சுட்டுவது இது. அதாவது, அறிவியத்தைத் தெரிவித்தலே கற்பித்தல் (teaching as telling) என்பதையோ அல்லது அறிவு அடைவின் ஒரே ஒரு சுட்டியாக எழுத்துப் பரீட்சைகளில் சித்தி பெறுதலே அமையும் என்பதையோ இன்றைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகள் முதன்மைப்படுத்தா.

ஒன்றிணைந்த அறிவார்ந்த சமுதாயமான இன்றைய பாடசாலைகளின் மற்றுமொரு மையநோக்கு அறிவார்ந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல் ஆகும். கற்போரிடையேயும் கற்கும் முறைகளிடையேயும் வேறுபாடுகள் உண்டு என்பதைப் பாராட்டி, வேற்றுமையில் ஒற்றுமை (Unity in Diversity) காணவிழைவதை இது சுட்டும். பாடசாலை என்பது பெரிய சமுதாயப் பின்னணியையும் குடித்தொகையையும் பிரதிபலிப்பதனால் அறிவார்ந்த கற்றற் சமுதாயத்தின் உறுப்பினர்கள் எல்லோருக்கும் பயனளிப்பதாயும் கற்றற் செயன்முறைக்கு வசதி அளிக்கும் வகையில் இச்சமுதாய உறுப்பினர்கள் யாவரும் பங்காளர்களாக விளங்குவதற்கு வேண்டிய மனப்பாங்கு, அறிவு, திறன்கள் என்பவற்றை மாணவர்கள் கற்றுக் கொள்ள உதவியளிப்பதாயும் ஒன்றிணைந்த அறிவார்ந்த சமுதாயம் விளங்கும்.

இந்நிலையில் இன்றைய இலத்திரனியல் / சூழலியல் யுகத்தில் மாணவர்கள் பற்றியதும் கற்றல் பற்றியதும் கற்பித்தல் பற்றியதுமான எமது முன்னைய எடுகோள்களை மீள்பார்வைக்குட்படுத்த வேண்டியது அவசியமாகும். மாணவர்களைப் பொறுத்தவரை, முன்னர் நோக்கியது போன்று அவர்கள் வெற்றுப் பாத்திரங்களோ அல்லது வெற்றுக் கற்பலகைகளோ அல்லர். கற்றல் என்பதும் வெறுமனே 'சித்திரப்பாவை என அத்தக அடங்கி' ஆசிரியர் கூறுவதை அவ்வாறே ஏற்றுக் கொள்ளல் அன்று. இதேபோல, கற்பித்தல் என்பதும் ஆசிரியரிடமிருந்து மாணவருக்கு அறிவியத்தை இடமாற்றஞ் செய்வதன்று.

புதிய, மாற்றமுறும் உலகில் மாணவர்கள் அறிவியத்தை உற்பத்தி செய்பவர்களும் கட்டியெழுப்புபவர்களும் ஆவர். அவர்கள் தமக்கேயுரிய கற்றல் நடையியலை / பாணியைக் (learning Style) கொண்டவர்கள் ; தமக்கேயுரிய பாணியில் தமக்கேயுரிய நாட்டங்களுடன் கற்றலில் ஈடுபடுபவர்கள். கடமைப் பொறுப்பு அளிக்கப்படுகின்ற போது அவர்கள் அதனைச் சிரமேற் கொண்டு ஒருவருக்கொருவர் கற்றலில் பங்களிப்புச் செய்யக் கூடியவர்களுமாவர். தகவல்களை வெறுமனே நுகர்வோராக மாத்திரமன்றி, அறிவியத்தை உருவாக்குபவர்களாகவும், கட்டியெழுப்புபவர்களாகவும் அம்மாணவர்கள் விளங்கி, நாம் விரும்பும் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதிலே எம்மோடு தோள் கொடுக்கக் கூடிய சிற்பிகளுமாவர் என்பதை நாம் விசுவாசமாக ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

ஒன்றிணைந்த அறிவார்ந்த சமுதாயமான இன்றைய பாடசாலைகளின் மற்றுமொரு மையநோக்கு அறிவார்ந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல் ஆகும். கற்போரிடையேயும் கற்கும் முறைகளிடையேயும் வேறுபாடுகள் உண்டு என்பதைப் பாராட்டி, வேற்றுமையில் ஒற்றுமை காண விழைவதை இது சுட்டும். பாடசாலை என்பது பெரிய சமுதாயப் பின்னணியையும் குடித்தொகையையும் பிரதிபலிப்பதனால் அறிவார்ந்த கற்றற் சமுதாயத்தின் உறுப்பினர்கள் எல்லோருக்கும் பயனளிப்பதாயும் கற்றற் செயன்முறைக்கு வசதி அளிக்கும் வகையில் இச்சமுதாய உறுப்பினர்கள் யாவரும் பங்காளர்களாக விளங்குவதற்கு வேண்டிய மனப்பாங்கு, அறிவு, திறன்கள் என்பவற்றை மாணவர்கள் கற்றுக் கொள்ள உதவியளிப்பதாயும் ஒன்றிணைந்த அறிவார்ந்த சமுதாயம் விளங்கும்.

இதே போன்று, ஆசிரியர்கள் பற்றிய சிந்தனையிலும் மாற்றங்கள் அவசியம். ஆசிரியர்கள் எல்லோருமே இலட்சிய பூர்மவமான புனிதமான சேவையாளர்கள் அல்லர். அவர்களுக்கும் தேவைகளும் மட்டுப்பாடுகளும் உண்டு. ஆசிரியர்கள் மதிக்கப்பட வேண்டியவர்களும் பாராட்டப்படவேண்டியவர்களும் ஆவர். அறிவாற்றல் விருத்தி நோக்கியும் உடலியல்சார் /சமூகஞ்சார் / மனவெழுச்சி சார் நலம் நோக்கியும் அவர்கள் ஊக்கமளிக்கப்பட வேண்டியவர்களே. ஆசிரியர்கள் முதன்மையாகப் பரிசோதகர்களோ அல்லது பராமரிப்பாளர்களோ அல்லர். அவர்கள் கற்றலை வளப்படுத்த வேண்டியவர்களும் அதனை எளிதாக்குபவர்களும் ஆவர் என்பதோடு, கற்றல் மீதான நாட்டத்தை மாணவர்களிடையே துளித்துளியாக, சிறுகச் சிறுக வளர்க்க வேண்டியவர்களும் ஆவர். எனவே இன்றைய புதிய யுகத்தில் கற்பித்தல் என்பது வெறமனே கூறுதல் அல்லது தெரிவித்தல் (telling) அன்று. உண்மையில் ஆராய்ந்தறிதல், வளம் திரட்டல், கண்டறிதல் சந்தர்ப்பங்களையும் வினாக்களையும் வழங்குதல் என அது பல்வேறு தொழிற்கூறுகளை உள்ளடக்கியது. மொத்தத்தில், கல்வியூட்டல் என்பது இலத்தீன் மொழியில் பொருள் கொள்ளப்படுவது போல 'முன்னோக்கிச் செலுத்தல்' என்பதாகும்.

இன்று பாடசாலைகளும் ஆசிரியர்களும் மாற்றம் பெற வேண்டியது ஏன் அவசியம் என்பதற்கு, உலகு மாற்றம் காண்கின்றது என்பதற்கும் அப்பால் மற்றுமொரு முக்கிய காரணமும் உள்ளது . ஏனெனில், மக்கள் எவ்வாறு கற்றுக் கொள்கிறார்கள் என்பது குறித்து இன்று நாம் அதிகமாகவே அறிந்துள்ளோம். மூளை எவ்வாறு தொழிற்படுகின்றது என்பது குறித்தும் ஒவ்வொரு தனியாளின் கற்றற்பாணியும் எவ்வாறுள்ளது என்பது குறித்தும் அதிகளவு ஆய்வுகள் அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்டு அவற்றின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. 'Xerox Research Foundation' எனும் அமைப்பினது மூளை ஆய்வு சம்பந்தமான உயர் பகுப்பாய்வுக்கு (meta- analysis on brain research) இணங்க, கற்றல் என்பது ஒரு குறித்த ஒழுங்கிலேயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறுகின்றது. 'செயலூக்கம் (active) → கண்ணோட்டம் (perspective) → பொதுமையாக்கம் / எண்ணக்கருவாக்கம் (Generalise / Conceptualise)' என அமையும் இந்தப் படிநிலைகளைக் குறித்த உதாரணமொன்றினூடாக விளக்கலாம்.

கணினியைக் கற்றுக் கொள்வோரில் அநேகர் கணினியைப் பெற்றுக் கொண்டதும் முதலில், தமக்குத் தெரிந்த அறிவைக் கொண்டும் தம்மால் செய்யக் கூடியவற்றைக் கொண்டும் கணினியிலுள்ள பொத்தான்களை/ குமிழ்களை அழுத்தியோ அல்லது திருகியோ அதனைச் செயற்படுத்த முனைவர். இது தன்னாட்சி ஆராய்ந்தறிகை (free exploration) எனப்படும். இதுவே கணினியைக் கற்பதற்கான முதலாவது படியாக அமையும் செயலூக்கம் ஆகும்.

**கணினியைக் கற்றுக் கொள்வோரில் அநேகர் கணினியைப் பெற்றுக் கொண்டதும் முதலில், தமக்குத் தெரிந்த அறிவைக் கொண்டும் தம்மால் செய்யக் கூடியவற்றைக் கொண்டும் கணினியிலுள்ள பொத்—தான்களை/ குமிழ்களை அழுத்தியோ அல்லது திருகியோ அதனைச் செயற்படுத்த முனைவர். இது தன்னாட்சி ஆராய்ந்தறிகை *(free exploration)* எனப்படும். இதுவே கணினியைக் கற்பதற்கான முதலாவது படியாக அமையும் செயலூக்கம் ஆகும்.**

அடுத்தாக, கணினியுடன் பெற்றுக் கொண்ட கையேட்டைப் பார்வையிடுவதன் மூலம் அவர்கள் தகவல்களைப் பெற்றுக் கொள்வர். ஆயினும், அநேகமானோர் கணினிக்கையேட்டை முழுமையாகப் படிக்க மாட்டார்கள். அதே நேரத்தில் தமக்குத்தேவையான பகுதிகளை மட்டும் வாசித்துக் கொண்டு, பின்னர் அப்புதிய தகவல்களை கணினியுடன் பரீட்சித்துக் கொள்வர். அதேவேளை, இந்த வாசிப்புக்கும் மேலாக, பலர் கணினி பற்றித் தெரிந்த தமது நண்பர்களை அழைத்து அவர்களிடமிருந்து விடயங்களைக் கிரகித்துக் கொள்ள முயல்வர். இதனை 'சகபாடி உதவியுடனான போதனை' (peer assisted instruction) என விகொட்ஸ்கி (Vygotsky) எனும் உளவியாளர் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு கற்றற் செயன்முறையிலும் ஆதாரமாகவும் சவாலாகவும் அமையும் வழிகாட்டலுடன் தமது சொந்தக்கற்றல் குறித்துப் பேசிக்கொள்ள வேண்டும்; வினாக்களை வினாவி தமது எண்ணங்களைப் பரிசீலித்துப் பார்த்துக் கொள்ளவும் வேண்டும். கூட்டுறவுக் கற்றல் (Cooperative learning) தொடர்பான கற்றல் உபாயங்களுக்கும் சகபாடிகளுடனான சிந்தனைத் தெறிப்புச் செயற்பாடுகளுக்கும் உண்மையில் இது ஆதாரமளிப்பதாக அமையும்.

இறுதிப் படிநிலையில் கணினிக்கல்வி சார்ந்த- சொல் நிரற்படுத்தல் (word processing) தரவு நிரற்படுத்தல் (data processing) போன்ற குறிப்பான ஆட்சிகளைப் பயின்றும் பரிசீலித்தும் தாம் பெற்றுக் கொண்ட எண்ணங்களையும் அறிவியத்தையும் ஒன்றிலிருந்து ஒன்றுக்குத் தொகுத்து பொதுமையாக்கங்களைச் செய்து எண்ணக்கருவாக்கம் மேற்கொள்ளப்படும்.

இதே தொடரொழுங்கே குழந்தையொன்றின் கற்றலிலும் இடம்பெறுவதாகும். 'சூடான மண்ணெண்ணெய் அடுப்பைத் தொட வேண்டாம்' என்ற தாயாரின் எச்சரிக்கையையும் மீறி குழந்தையொன்று அதனைத் தொட்டுப் பார்த்தலும், அடுப்பைப் பற்றிய சொந்தக் கருத்தொன்றை உருவாக்கி ' அது சூடாக உள்ளது.' எனத் தயார் கூறியதன் கருத்தை உய்த்துணர்தலும், பின்பு நெருப்புப் பிறப்பிக்கப்படும் இடங்களைத் தொடக்கூடாது எனப் பொதுமையாக்கஞ்செய்வதும் கற்றற் படிநிலை ஒழுங்கையே சுட்டுவனவாகும்.

உண்மையில் பிள்ளைகளின் கற்றலில் நிகழும் செயன்முறை ஒழுங்கு இதுதான் எனினும், எமது ஆசிரியர்களிற் பலர் இதற்கு எதிரான செயலொழுங்கிலேயே செயற்பட முனைகின்றனர். எண்ணக்கருக்களுடன் ஆரம்பித்த அவை குறித்த தமது சொந்த விளக்கங்களைக் கொடுத்த பின்னரே அத்தகவல்களுடன் பிள்ளைகளைச் செயலில் ஈடுபடுத்துகின்றனர். இவ்வாறு எண்ணக்கருவைக் கற்பித்து விளக்கத்தையும் கொடுத்து குறித்தவொரு செயலைச் செய்யுமாறு பணிக்கப்படுகின்றபோது மாணவர்கள் அக்குறித்த செயலைச் செய்யும் ஆற்றலைப் பெறுகின்றார்களே ஒழிய, வேறு சந்தர்ப்பங்களில் செயலூக்கத்துடன் அதே தகவல்களைப் பிரயோகிக்கும் அல்லது பொதுமையாக்கம் செய்யும் ஆற்றலை வளர்க்க முடியாமற் போய் விடுகின்றது. அத்தோடு, இத்தொடரில் கற்பிக்கின்றபோது, ஆசிரியர்களுக்கு நேரமும் போதாமல் போய்விடுகின்றது. ஆனால் இதற்கு நேரெதிராக மாணவர்களை முதலில் கற்றலில் ஈடுபாடுகொள்ளச் செய்தல் (engagement) அவசியமாகும்.

இக்கருத்துகளின் பின்னணியிலேயே கற்றல்-கற்பித்தற் செயற்பாடு தொடர்பாக இன்று 5E வட்டம் அல்லது E5 மாதிரி (5 E - cycle or E5 Model) ஓர் உருமாற்றச் செயன்முறையாக (Transformation Process) விதந்துரைக்கப்படுகின்றது. ஈடுபாடுகொள்ளல் (Engagement) ஆராய்தறிதல் (Exploration) விளக்கம் பெறல் (Explanation) விரிவாக்கம் செய்தல் (Elaboration) ,மதிப்பீடு செய்தல் (Evaluation) என்ற ஒழுங்கில் அமையும் இத்தொடரகம் கற்றல்- கற்பித்தற் செயற்பாடு ஓர் இடமாற்றச் செயற்பாடாக அல்லாது ஓர் உருமாற்றச் செயற்பாடாக அமைவதை உறுதி செய்வதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு, ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையேயான இடைவினையையும் மாணவர்களிடையேயான இடைவினையையும் இது வளர்ப்பதுமாகும்.

மேலும், 'சுற்றுச் சூழலுடன் இடைவினைகொள்வதன் மூலமும் சமூக இடைவினைகளூடாகவும் மாணவர்கள் தமது சொந்த அறிவைத் தாமே கட்டியெழுப்பிக் கொள்கிறார்கள் என்ற கட்டுருவாக்க வாதத்தின் (Constructivism) அடிப்படையையும் 'E5 மாதிரி' தன்னகத்தே கொண்டுள்ளது. இத்தொடரகத்தின் படிநிலைகளில் கவனஞ் செலுத்தி அக்கறையோடு அவற்றைக் கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டில் இடம்பெறச் செய்யும்போது, அச்செயற்பாடு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மகிழ்வூட்டும் நடவடிக்கையாக அமையும். இச்செயற்பாட்டில் ஆசிரியருக்கும் மாணவர்களுக்குமிடையேயான உரைவினையும் (discourse) ஆதாரமளித்தலும் (Scaffolding) முக்கிய கூறுகளாகும். மொழி ஆற்றலோடு இணைந்து இவை வளம் பெறும்போது, மாணவரின் செயன் முறைத்திறன்களும் வளர்க்கப்படும்.

> ***கற்றல் — கற்பித்தற் செயற்பாடு தொடர்பாக இன்று 5E வட்டம் அல்லது E5 மாதிரி (5 E - cycle or E5 Model) ஓர் உருமாற்றச் செயன் முறையாக (Transformation Process) விதந்துரைக்கப்படுகின்றது. ஈடுபாடுகொள்ளல் (Engagement) ஆராய்தறிதல் (Exploration) விளக்கம் பெறல் (Explanation) விரிவாக்கம் செய்தல் (Elaboration) ,மதிப்பீடு செய்தல் (Evaluation) என்ற ஒழுங்கில் அமையும் இத்தொடரகம் கற்றல் — கற்பித்தற் செயற்பாடு ஓர் இடமாற்றச் செயற்பாடாக அல்லாது ஓர் உருமாற்றச் செயற்பாடாக அமைவதை உறுதி செய்வதாகும். அத்தோடு, ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையேயான இடைவினையையும் மாணவர்களிடையேயான இடைவினையையும் இது வளர்ப்பதுமாகும்.***

### *REFERENCES :*


1. Barth, Roland, (1991). Restructuring schools: some questions for teachers and Principals Phi Detta Kappan, october, 123-129.
2. Hough, M.& Pain, J (1997). Creating quality learning communities. Melbourne: Mcmillan.
3. Long, D. (1990). Learner managed learning. London: Kogan Page
4. Vygotsky, L.S.(1978) mind in society. cambridge, MA: Harvard University Press.
5. Xerox Research Foundation (1990) Meta analysis of Brain Research.


---

எழுத்தாதாரங்கள் அற்ற மக்கள், இடம் போன்றவற்றின் வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்தலை இவைவரலாறு (ethnohistory) எனலாம். மக்கள் வாழ்வின் எதார்த்தங்களை அடிப்படையாக வைத்து இவை வரலாற்றுக் கருத்துகள் உருவாக்கப்படும். தொல்குடிகள் மற்றும் திணைக்குடிகளின் வரலாற்றைத் தொல்லியல் எழுத்து மற்றும் வாய்மொழி ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு மீட்டுருவாக்கம் செய்தலை அது குறிக்கும்

-டாக்டர்- ஆ.செல்லப் பெருமாள்
'சனங்களின் வரலாறு' பக்-26, 2004

"வாசிப்பில் இரண்டு வகை உண்டு. ஒன்று மௌனவாசிப்பு. மற்றது உரத்த வாசிப்பு. நாமெல்லாம் மௌன வாசிப்புக்காரர்கள்தான். குழந்தைகளாக இருந்த போது பாடப்புத்தகத்தை வாய்விட்டு உரக்க வாசித்திருப்போம். உரத்த வாசிப்பு என்று நான் இங்கு குறிப்பிடுவது அதை அல்ல. ஊரைக் கூட்டி உட்கார வைத்து ஒருவர் உரத்து வாசிக்க மற்றவர் கேட்கிறார்களே அது தான் உரத்த வாசிப்பு. நமது கிராமப்புறங்களில் பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை, அல்லி அரசாணி மாலை, நல்லதங்காள் கதை என்று பெரிய எழுத்தில் அச்சிடப்பட்ட தடி புஸ்தகங்களை வைத்துக் கொண்டு உரைநடையை ராகம் போட்டு உரக்க வாசிக்கிற ஒரு மரபு உண்டு"

ச.தமிழ்ச்செல்வன்" 'இருளும் ஒளியும்'
பக்- 76 , 2004 (அறிவொளி இயக்க அனுபவம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவெழுச்சி நுண்மதியும் (ஈ.கியு) மனவெழுச்சி சார்ந்த எழுத்தறிவும்

நுண்மதிப் பரீட்சைகள் வரையறுக் கப்பட்ட சில ஆற்றல்களை மட்டும் கணீப்பீடு செய்வதில் தீவிரம் காட்டு கின்றது. காரணங்காணல், தொடர்பு காணல், பொதுமை காணல், பிரயோ கித்தல், பகுத்து நோக்குதல், தொகுத்து நோக்குதல், கணியப்படுத்தல், எறிவு செய்தல் முதலாம் ஆற்றல்களே நுண்மதித்தேர்வுகளில் முனைப்புடன் நோக்கப்படுகின்றன. ஒருவரது படைப்பாற்றல், புத்தாக்க மலர்ச்சி, கற்பனை வளம் முதலியவற்றை நுண்மதித்தேர்வுகள் நிராகரித்து விடுகின்றன என்ற திறனாய்வுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

**பேரா. சபா. ஜெயராசா**
கல்வியியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நுண்மதி ஈவு பற்றிய நேர் எதிர் வாதங்கள் உளவியலிலே தீவிரமாக நிகழ்ந்து வருகின்றன. இலங்கையில் நுண்மதிப் பரீட்சைகளுக்கு அதீத முக்கியத்துவம் கொடுக்கப்படுவதுடன் உயர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பில் அது பிரதான தீர்மானிப்பு விசையாக்கப்பட்டுள்ளமையும் மீளாய்வுக்குரியவை. நுண்மதிப் பரீட்சைகளில் அதிக புள்ளிகளை ஈட்டுபவர்கள் சிறந்த நிர்வாக வலுமிக்கவர்கள் என்றோ, சிறந்த இசைவாக்கமுள்ளவர்கள் என்றோ, வினைத்திறன் மிகு தொடர்பாடல் ஆற்றல்கள் கொண்டவர்கள் என்றோ திடப்படுத்த முடியாதுள்ளது.

நுண்மதிப் பரீட்சைகள் வரையறுக்கப்பட்ட சில ஆற்றல்களை மட்டும் கணீப்பீடு செய்வதில் தீவிரம் காட்டுகின்றது. காரணங்காணல், தொடர்புகாணல், பொதுமை காணல், பிரயோகித்தல், பகுத்து நோக்குதல், தொகுத்துநோக்குதல், கணியப்படுத்தல், எறிவு செய்தல் முதலாம் ஆற்றல்களே நுண்மதித்தேர்வுகளில் முனைப்புடன் நோக்கப்படுகின்றன. ஒருவரது படைப்பாற்றல், புத்தாக்க மலர்ச்சி, கற்பனை வளம் முதலியவற்றை நுண்மதித்தேர்வுகள் நிராகரித்து விடுகின்றன என்ற திறனாய்வுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

இந்நிலையில் நுண்மதி பற்றி ஆய்வு செய்தோர் அதன் பரிமாணங்களை விரிவாக்கும் முயற்சியிலும் ஈடுபடலானார்கள். எண் சார்ந்த நுண்மதி, மொழிசார்ந்த நுண்மதி, காலம் மற்றும் இடைவெளி சார்ந்த நுண்மதி பொருளீட்டம் சார்ந்த நுண்மதி, அரசியல் நுண்மதி, சமூக நுண்மதி, கலை நுண்மதி, இசை நுண்மதி என்றவாறு நுண்மதி பற்றிய நோக்கை விரிவு படுத்தவும் பன்மைப் படுத்தவும் முயன்றார்கள்.

நுண்மதித்தேர்வுகளையும் அவற்றின் மட்டுப்பாடுகளையும் தீவிர பரிசீலனைகளுக்கு உட்படுத்திய கலாநிதி டானியல் கோல்மன் 1995 ஆம் ஆண்டில் மனவெழுச்சி நுண்மதி (Danial Goleman, Emotional Intelligence) என்ற நூலை வெளியிட்டார். மனிதவாழ்க்கை, மனிதனின் தொழிற்பாடுகள், செயல் ஆற்றுகை, இசைவாக்கம் முதலியவற்றில் மனவெழுச்சிகள் வலிமையான பங்காற்றுகின்றன. இந்நிலையில் ஒருவரது மனவெழுச்சியை விளங்குதலும், தொகுத்தலும் வியாக்கியானப்படுத்தலும் முக்கியத்துவம் பெறுதல் விதந்துரைக்கப்படலாயிற்று.

மனவெழுச்சி நுண்மதியானது பின்வரும் பரப்புக்களை உள்ளடக்கியதாகக் காணப்படும்.

1. மனவெழுச்சி பற்றிய பிரக்ஞை மற்றும் தருக்க நிலை உணர்வுகளை, வளர்த்துக் கொள்ளும் திறன் அதாவது உணர்வுகளைத் தொழிற்பாடுகளில் இருந்து வேறுபடுத்திப் பார்க்கும் திறன் இங்கே வலியுறுத்தப்படும்.
2. மனவெழுச்சிகளை முகாமை செய்யும் திறன் அடுத்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. உதாரணமாக பொங்கி எழும் கோபம், விரைந்து விசை கொள்ளும் பயம் முதலியவற்றை ஒருவர் தமது அறிகை வீச்சினால் எவ்வாறு கையாளுகின்றார் என்பது இப்பிரிவில் நோக்கப்படும்.
3. மனவெழுச்சிகளை வாசிப்புக்கு உட்படுத்துதல் (Reading Emotions) அடுத்ததாக வலியுறுத்தப்படுகின்றது. தான் எவ்வாறு ஒரு மனவெழுச்சியை வெளிப்படுத்துகின்றார், தமது மனவெழுச்சிக் கோலங்களை மற்றவர்கள் எவ்வாறு வாசித்துக் கொள்கின்றார்கள், மற்றவர்களது மனவெழுச்சிகளைத் தாம் எவ்வாறு வாசித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுகின்றார் என்பவற்றை அறிகை நிலைப்படுத்தல் இங்கே சிறப்பிடம் பெறுகின்றது.

4. ஒன்றுடன் ஒன்று சார்ந்து நிற்கும் தொடர்புகளைக் கையாளும் ஆற்றல், தொடர்புகளால் எழும் மனவெழுச்சிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் ஆற்றல்களும் இப்பிரிவில் வலியுறுத்தப்படுகின்றன.

மனவெழுச்சி நுண்மதி மிக்கவர்கள், சுயகட்டுப்பாடு மிக்கவர்களையும், நெருக்கடி நிலைகளை நெகிழ்ச்சியாகக் கையாளும் திறன் உள்ளவர்களாகவும், தம்மையும் பிறரையும் ஊக்கல் நிலைக்கு உள்ளாக்குபவர்களாகவும் காணப்படுவர். மனவெழுச்சி நுண்மதி குன்றியவர்கள் தொழிற்கூடங்களிலும், பாடசாலைகளிலும், இல்லங்களிலும், குழுக்களிலும் வினையாற்றல் குன்றியோராக இருத்தல் மட்டுமன்றி பிரச்சினைக்குரியவர்களாகவும் மாறுகின்றனர்.

சேர்வு, தனிமை, கோபம், கவலை, கட்டுப்படாமை, வன்மை, வக்கிரகம், அதீத கலக்கம், காரணமற்ற சந்தேகம், புறங்கூறும் உந்தல், மன ஒருமைப்பாட்டை எட்டமுடியாஅவலம், இசைவாக்க முடிய இடர், முதலிய குணவியல்புகள் மனவெழுச்சி நுண்மதி (ஈ.கியு) குன்றியவர்களிடத்தே காணப்படும். தமது ஆற்றுகையை மேம்படுத்தவும், பிறரது ஆற்றல்களை வெளிக்கொண்டுவரவும், மனவெழுச்சியின் பரிமாணங்களைப் பயன்படுத்த முடியாத இயல்புகளும் அவர்களிடத்தே காணப்படும்.

இந்நிலையில் மனவெழுச்சி பற்றிய கற்பித்தல் மனவெழுச்சி எழுத்தறிவு (Emotional Literacy) முதலியவை அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மனவெழுச்சி எழுத்தறிவில் பின்வரும் அறிபரப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

1. மனவெழுச்சிக்கும், உடலின் தொழிற்பாட்டியலுக்குமுள்ள தொடர்புகளை விளங்குதல்- உதாரணமாக மனவெழுச்சியின்போது நிகழும் குருதி அழுத்த வேறுபாடு, உடலின் வெப்ப அதிகரிப்பு, வலு வெளிப்பாட்டு அதிகரிப்பு, முதலியவை பற்றிய அறிவைப் புகட்டுதல்.

2. மனவெழுச்சிக்கும் அறிகைத் தொழிற்பாடுகள் மற்றும் கற்றல் தொழிற்பாடுகள், நியாயித்தற் தொழிற்பாடுகள் முதலியவற்றுக்குமுள்ள தொடர்புகளை அறிதல்.

**ஒருவரது வாழ்க்கை மற்றும் சமூக இருப்புக்கும் மனவெழுச்சிகளுக்குமிடையே தொடர்புகள் காணப்படுகிறன. எதிர்காலம் பற்றிய நம்பிக்கை மற்றும் நம்பிக்கை வீழ்ச்சி ஆகியவை மனவெழுச்சிகளை அருட்டி விடுகின்றன. வாழ்வின் நேர்விசைகளுக்கும் எதிர்விசைகளுக்குமிடையே தோற்றுவிக்கப்படும் முரண்பாடுகள் மனவெழுச்சிகளை உருவாக்குதலை மனவெழுச்சி இயங்கியற்கோட்பாடு விளக்குகின்றது.**

3. மனவெழுச்சிகளுக்கும், மனிதரது நேர் நடத்தைகள், எதிர் நடத்தைகள், சமூக இசைவாக்கம், மொழித் தொடர்பாடல்கள், உடல் மொழி, அசைவு மொழி முதலியவற்றுக்குமுள்ள தொடர்புகளை விளங்கிக் கொள்ளல்.

4. கலை இலக்கிய ஆக்கங்களுக்கும் மனவெழுச்சிகளுக்குமுள்ள உள்ளார்ந்த தொடர்புகளைப் பகுத்து நோக்குதல்.

5. மனித ஊக்கல், ஆற்றுகை, ஆளுமை, தலைமைத்துவம்,வசீகரிப்பு ஆகியவற்றிலே நேர் மனவெழுச்சிகள், மற்றும் எதிர்மனவெழுச்சிகள் ஆகியவற்றின் பங்கினையும் பரிமாணங்களையும் தெளிவு படுத்தல்.

6. மனவெழுச்சி உபாயங்களை கற்றலிலும் (Emotional learning) கற்பித்தலிலும், தொழில்நிலையங்களிலும் பயன்படுத்துதலைப் பற்றிய அறிவைப் பெறுதல்.

7. வாழ்க்கையின் இனிமையான பக்கங்களும், பரிமாணங்களும் நேர்மனவெழுச்சிகளுடன் கொண்டுள்ள இணைப்புக்களை இனங்காணல்.

ஒருவரது வாழ்க்கை மற்றும் சமூக இருப்புக்கும் மனவெழுச்சிகளுக்குமிடையே தொடர்புகள் காணப்படுகிறன. எதிர்காலம் பற்றிய நம்பிக்கை மற்றும் நம்பிக்கை வீழ்ச்சி ஆகியவை மனவெழுச்சிகளை அருட்டி விடுகின்றன. வாழ்வின் நேர்விசைகளுக்கும் எதிர்விசைகளுக்குமிடையே தோற்றுவிக்கப்படும் முரண்பாடுகள் மனவெழுச்சிகளை உருவாக்குதலை மனவெழுச்சி இயங்கியற்கோட்பாடு விளக்குகின்றது. மனவெழுச்சி தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள கோட்பாடுகளுள் ஜேம்ஸ்- லாங்கோட்பாடு, கனன் பார்ட் கோட்பாடு ஆகியவை முக்கியத்துவம் பெறுகின்றன. ஆனால் மனவெழுச்சி இயங்கியற் கோட்பாடு உயிரியல் மற்றும் சமூக முரண்பாடுகளை அடியொற்றிய இயக்க பூர்வமான கருத்தாடல்களை முன்வைக்கின்றது.

**இணையத்தள உசாத்துணை**

1. http: // www.emotions.ccs brandeis.edu/emtion/html
2. http: // www.erin.utoronto.ca/nw3psy 398 anskerkey 3html
3. http: // senerdip.brynmawr.edu/bp
4. htpp: // varsun. vasliar.edu/r/osych/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# பெற்றோர்களின் ஒத்துழைப்பினைப் பெறுவதற்கான பாடசாலை முகாமைத்துவ நுட்பங்கள்

**(அதிபர்களுடனான கலந்துரையாடல்களின் தொகுப்பு)**

*பல பாடசாலை தாம் விரும்பிய விடயங்களை நிறைவேற்றுவதற்குப் பெற்றோர்களை சம்மதிக்க வைப்பதையே குறியாகக் கொண்டு இயங்குகின்றன. பாடசாலை மட்டத்தில் பெற்றோர்களின் பங்களிப்பின்றி தயாரிக்கப்பட்ட திட்டங்களை பெற்றோர்களின் மீது திணித்து அவற்றை செயலாக்குவதில் பெற்றோர்களின் விருப்பங்களை பெற்றுக்கொள்ளவே பெரும்பாலும் முனைகின்றன என்பது பெற்றோர்களின் குற்றச்சாட்டுகளாகும்.*

க. சுவர்ணராஜா
விரிவுரையாளர்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

## அறிமுகம்

பாடசாலை என்ற நிறுவனத்தின் பொருத்தமிகு இயக்கத்திற்குப் பெற்றோர்களின் ஒத்துழைப்பு இன்றியமையாத ஒரு காரணியாகும். வெற்றிகரமான பாடசாலைகளின் இயல்புகளை நோக்கும் அப்பாட-சாலைகள் பெற்றோர்களின் ஒத்துழைப்பினைக் கணிசமான அளவு பெற்றுள்ளமையும் முக்கியமாக குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாக உள்ளது.

பல பாடசாலை அதிபர்கள் பெற்றோர்களின் ஒத்துழைப்பினைப் பெறுவதில் பல்வேறு சவால்களை எதிர்நோக்குவதாகவும் கூறுகின்றனர். பெற்றோர்களின் ஒத்துழைப்பு இல்லாவிடின் பாடசாலைகளை செவ்வனே நடத்திச் செல்ல முடியாது. பாடசாலை தொடர்பான அபிவிருத்திக் கருமங்களை முன்னெடுத்துச் செல்வதில் பல்வேறு தடைகளை எதிர்நோக்க நேரிடும். எனவும் அதிபர்கள் தெரிவிக்கின்றனர். இக்கட்டுரையானது பெற்றோர்களின் ஒத்துழைப்பினைப் பெறுவதற்கான முகாமைத்துவ நுட்பங்கள் தொடர்பாக மூன்று பாடசாலை அதிபர்கள் முன் வைத்த கருத்துக்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

## அதிபர் —1

"பெற்றோர்கள் அறிய விரும்பும் பாட விடயங்களை இலகுவாக முன்வைக்கக்கூடிய விதத்தில் பாடசாலை முறைமை அமைதல் வேண்டும்".

பல பாடசாலை தாம் விரும்பிய விடயங்களை நிறைவேற்றுவதற்குப் பெற்றோர்களை சம்மதிக்க வைப்பதையே குறியாகக் கொண்டு இயங்குகின்றன. பாடசாலை மட்டத்தில் பெற்றோர்களின் பங்களிப்பின்றி தயாரிக்கப்பட்ட திட்டங்களை பெற்றோர்களின் மீது திணித்து அவற்றை செயலாக்குவதில் பெற்றோர்களின் விருப்பங்களை பெற்றுக் கொள்ளவே பெரும்பாலும் முனைகின்றன என்பது பெற்றோர்களின் குற்றச்சாட்டு-களாகும்.

பாடசாலை முறைமையானது பெற்றோர்களின் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாகவும், பாடசாலை மட்ட அபிவிருத்தி தொடர்பாக பெற்றோர்-கள் கொண்டுள்ள கருத்துக்கள் தொடர்பாகவும் பெருமளவில் கரிசனை காட்டுதல் வேண்டும். பொதுவாகப் பாடசாலைகளிலிருந்து பெற்றோர்கள் பின்வருவனவற்றைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகின்றார்கள்.

1. தனது பிள்ளையின் அடைவு மட்டம் எத்தகையது தமது பிள்ளையின் அடைவுமட்டம் அவரின் இயலளவுக்குப் பொருத்தமானதா.
2. தனது பிள்ளையின் அடைவுமட்டம், தொடர்பாகவும் அவரது நடத்தை தொடர்பாகவும் ஆசிரியர் கொண்டுள்ள கரிசனையானது, ஆசிரியர் செலுத்தும் கவனம் எத்தகையது.
3. ஆசிரியர்கள் ஒவ்வொரு தவணையிலும் என்னென்ன செயற்பாடு-களில் தமது பிள்ளை தொடர்பாக ஈடுபட உள்ளனர். இச் செயற்பாடு-களுக்கு பெற்றோர் ஆற்ற வேண்டிய பங்களிப்பு யாது, இதற்கான முன்திட்டமிடல் எத்தகையது. (உதாரணமாக முதலாம் தவணை முடிவில் விளையாட்டுப்போட்டி நடைபெறவுள்ளது.இதில் பெற்றோர் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும். இதற்காகப் பிள்ளையிட-மிருந்து அறவிடப்படவுள்ள கட்டணம் எவ்வளவு)
4. தனது பிள்ளையின் தற்போதைய அடைவுமட்டம் அவனது எதிர்-காலத் தேசிய மட்டப் பரீட்சை அடைவுமட்டத்தில் எத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கத்தினை செலுத்த உள்ளது. மற்றவர்களுடன் ஒப்பிடும் போது இவனது நிலை என்ன. அவனது விருத்திக்கான திட்டமிடல் யாது?

5. பாடசாலை மட்டத்தில் நடைபெறும் என்னென்ன நிகழ்ச்சிகளில் தாங்கள் பங்கெடுத்துக் கொள்ளலாம். இவை தொடர்பான விபரங்கள்.

6. பாடசாலைக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிதி உதவியின் அளவு யாது. இவை பாடசாலையினால் சரிவரப் பயன்படுத்தப்படுகின்றதா.

மேற்கண்ட வகையில் ஒரு பாடசாலை தொடர்பாகப் பெற்றோர் தெரிந்து கொள்ள விரும்பும் விடயங்களுக்கு இலகுவாக விடைபெறக் கூடிய விதத்தில் பாடசாலையின் முகாமைத்துவ முறைமை அமைக்கப்படுதல் வேண்டும்.

உதாரணமாகத் தனது பிள்ளை தொடர்பான ஆசிரியரின் நிலைப்பாடு என்ற வினாவுக்கு விடையளிப்பதற்காக பின்வரும் முறைமை பாடசாலைகளில் காணப்படலாம்.

1. பெற்றோர்- ஆசிரியர் மாதாந்த சந்திப்பு
2. பெற்றோரின் அவதானிப்பைப் பெறும் ஆசிரியர் குறிப்புக்கள்
3. வகுப்பறையின் விசேட நிகழ்ச்சிகள் தொடர்பாக பெற்றோருக்கான அறிவுறுத்தல்கள்
4. வகுப்பறையை அவதானிப்பதற்குப் பெற்றோர்க்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுதல் என்பனவாகும்.

அரச நிதி தொடர்பான விபரங்களை அறிவதற்கு. அதிபர் தனது மாதாந்த அறிக்கையை பெற்றோர்க்கு காட்சிப்படுத்தலாம்.

மேற்கண்டவாறான அணுகுமுறைகள் மூலம் பெற்றோர் தெரிந்து கொள்ள விரும்பியவற்றை தெரிவிப்பதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுதல். பெற்றோர்களின் ஒத்துழைப்பினைப் பெறுவதற்கான ஒரு நுட்பமாக அமையும்.

## அதிபர் — 2

"அதிபர், ஆசிரியர்கள் பெற்றோர்களுடன் கொள்ளும் அறநெறிக்குட்பட்ட தொடர்பு பெற்றோரின் ஒத்துழைப்பினை ஊக்குவிக்கும்"

அதிபர், ஆசிரியர்கள் ஏனையோர் தொடர்பான உயரிய கரிசனை காட்டும் தொழிலுடன் இணைந்த பொறுப்பினைக் கொண்டுள்ளனர். ஆகவே அவர்கள் பெற்றோர்களைச் சந்திக்கும் போது கூட்டுக் கண்ணியமும், முன்மாதிரி நிலையும் பெற்றோர்களின் ஒத்துழைப்பினை பாடசாலைக்கு பெற்றுத் தருவதாக அமையும்.

உதாரணமாகப் பெற்றோர் சந்திப்பின்போது அதிபர், ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டிய சில அறநெறிகள் வருமாறு :

1. பிள்ளைகளின் பலவீனங்கள், இயலாமைகள், குற்றங்கள் சம்பந்தமாகத் தனிப்பட்ட முறையிலும். அனுதாப உணர்வுடனும் பெற்றோர்களுடன் கலந்துரையாட வேண்டும். இதனால் பாடசாலை மீதும், அதிபர் ஆசிரியாகள் மீதும் தனிப்பட்ட மதிப்பு பெற்றோருக்கு உருவாகும்.

2. எல்லா பெற்றோர்களும் தமது பிள்ளைகளை வெகுவாக நேசிப்பதாலும், உயிருக்குயிரான அன்பினை செலுத்துவதாலும், பெற்றோருடன் பிள்ளைகள் தொடர்பாக உரையாடும் போது பிள்ளைகளை இழிவுப்படுத்தும், அல்லது துன்புறுத்தும் வார்த்தைகளைப் பயன்படுத்தி உரையாடக்கூடாது. ஒவ்வொரு ஆசிரியரும் அதிபரும் தமது இளமைக் காலத்தினை நினைவுப்படுத்தி விமர்சனங்களை முன்வைத்தல் வேண்டும். மற்றவர்கள் மீது பழி சுமத்தல், எல்லாக் குற்றங்களுக்கும் பெற்றோரை பொறுப்பேற்கச் செய்தல் என்பன பெற்றோரை விரக்திக்கும் மனமுறிவுக்கும் உள்ளாக்கும் என்பதை அதிபர் ஆசிரியர்கள் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

3. பிள்ளைகளின் உடல், உள குறைபாடுகள் தொடர்பாக, குறை கூறுதலை தவிர்த்துத் தேவையான ஆலோசனை வழிகாட்டுதல்களை வழங்குதல் பெற்றோர்களின் நன்மதிப்பினை பாடசாலை பெற வழிவகுக்கும்.

4. பிள்ளைகளின் தேவைப்பாடுகள் அல்லது குறைபாடுகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு பெற்றோர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தால், அத்தினத்தில் அதற்குரிய நேரத்தினை முன்கூட்டியே திட்டமிட்டுக் கொள்ளல் வேண்டும். பெற்றோர்களைத் தொடர்ந்து அலைக்கழிப்பது, அவர்களை நீண்ட நேரம் காத்திருக்கச் செய்தல் என்பன பொருத்தமற்ற ஒரு நிலையைத் தோற்றுவிக்கும். அத்துடன் பெற்றோர்களின் பல்வேறு முயற்சிகளுக்கும் தடை ஏற்படுத்துவதாக அமையும். உதாரணமாக, ஒரு அரசாங்க ஊழியர் அழைக்கப்பட்டிருப்பின், அவர் பாடசாலையில் தாமதிக்கும்

**"அதிபர், ஆசிரியர்கள் பெற்றோர்களுடன் கொள்ளும் அறநெறிக்குட்பட்ட தொடர்பு பெற்றோரின் ஒத்துழைப்பினை ஊக்குவிக்கும்"**

அதிபர், ஆசிரியர்கள் ஏனையோர் தொடர்பான உயரிய கரிசனை காட்டும் தொழிலுடன் இணைந்த பொறுப்பினைக் கொண்டுள்ளனர். ஆகவே அவர்கள் பெற்றோர்களைச் சந்திக்கும் போது கூட்டுக் கண்ணியமும், முன்மாதிரி நிலையும் பெற்றோர்களின் ஒத்துழைப்பினை பாடசாலைக்கு பெற்றுத் தருவதாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணங்கள், அவரது சேவையைப் பாதிக்கும். ஒரு அன்றாடம் கூலி வேலை செய்பவராயின் அவரின் அன்றைய வருமானம் பாதிக்கப்படும். ஆகவே நேர முகாமைத்துவம் பெற்றோர் தொடர்பாக பேணப்படடல் மற்றுமொரு அறநெறியாகும்.

> "பெற்றோர்கள் பாடசாலைக்கு வருகை தருதல் ஒரு மகிழ்ச்சியூட்டக் கூடிய அனுபவமாக மாற்றியமைக்கப்படல்"
>
> பெற்றோர்கள் பாடசாலைக்கு வருகைதருதல் அவர்களுக்குப் புதிய அறிவையும், மகிழ்ச்சியூட்டக் கூடிய அனுபவத்தினையும் தருவதாக அமையும் போது பாடசாலைக்கான பெற்றோர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்

## அதிபர் — 3

"பெற்றோர்கள் பாடசாலைக்கு வருகை தருதல் ஒரு மகிழ்ச்சியூட்டக் கூடிய அனுபவமாக மாற்றியமைக்கப்படல்"

பெற்றோர்கள் பாடசாலைக்கு வருகைதருதல் அவர்களுக்குப் புதிய அறிவையும், மகிழ்ச்சியூட்டக் கூடிய அனுபவத்தினையும் தருவதாக அமையும் போது பாடசாலைக்கான பெற்றோர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும் என்பதாக இவர் கருத்து அமைகின்றது.

பாடசாலையின் புதிய கலைத்திட்டம், புதிய அபிவிருத்திவேலைகள், தொடர்பாக பெற்றோர் அனுபவம் பெறுவதற்கு நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட ஒன்று கூடல்கள் செயலமர்வுகள் பெற்றோர்களின் ஆர்வத்தை அதிகரிப்பதாக அமையும். உதாரணமாக, பெற்றோர்கள் ஒன்றிணைந்து ஒரு சிற்றுண்டி உடனான கலந்துரையாடல் அவர்களின் மகிழ்வினை உயர்த்தும். ஒரு செயலமர்வுக்கு பெற்றோர்களை அழைக்கும்போது அவர்களை கௌரவமாக வரவேற்பதற்கு மண்டபத்தின் முன்னால் செய்யப்பட்டிருக்கும் ஒழுங்கு கூட பெற்றோரின் மனமகிழ்வை அதிகரிக்கும் ஒரு நுட்பமாகும்.

சில பாடசாலைகளில் பெற்றோர்கள் அழைக்கப்பட்டிருப்பர். ஆனால் அவர்கள் எந்த மண்டபத்திற்கு செல்லல் வேண்டும் என்பதனை வழிகாட்டுவதற்குக் கூட அங்கு எந்தவிதமான திட்டங்களும் காணப்படமாட்டாது. இந்நிலையில் அவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகி அதிருப்தியடைகின்றனர்.

ஆகவே பெற்றோர்களுக்கு மகிழ்ச்சி ஊட்டக் கூடிய முறையிலான முறைமை பாடசாலை மீதான பெற்றோரின் ஒத்துழைப்பினை அதிகரிக்கும். ஒவ்வொரு அதிபர் ஆசிரியர்களும் தமது தொழில் சார்ந்த கலாசார மேம்பாட்டுக்கு மேற்குறித்த உணர்திறன்கள் நடத்தைக் கோலங்கள் ஆகியவற்றைப் பின்பற்றும் பொழுது இத்தகைய சவால்களையும் எதிர் கொண்டு முன்னேற முடியும். பாடசாலைக் கலாசாரம் ஒன்றை கட்டமைக்கும் பாரிய பணியில் முழு மூச்சுடன் ஈடுபட முடியும்.

---

> நமக்குத் தெரிந்தது ஒன்றுமில்லை எல்லோரும் ஒன்று சேர்ந்து அறிந்து கொள்வதும் அறிவிலும் அறிவியலிலும் அனைத்து வர்க்கங்களையும் ஒழுங்கிணைப்பதும் தான் ஒரே நம்பிக்கை
>
> லியோ டால்ஸ்டாய்
>
> ரஷ்ய எழுத்தாளர் *(1828 — 1910)*

---


அகவிழி

**AHAVILI,**
*3, Torrington Avenue, Colombo - 07*
*Tel : 011-2506272*
*E.mail : ahavili@viluthu.org*

### சந்தா விபரம்

காசோலை மூலம் பணம் செலுத்துபவர்கள் **AHAVILI** எனப் பெயரிட்டு அனுப்புக.

காசுக் கட்டளையாயின் **AHAVILI** எனப் பெயரிட்டு **HAVELOCK TOWN** தபால்நிலையத்தில் மாற்றக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்

ஏற்கனவே ஆண்டுச் சந்தா செலுத்தி இதழ்களைப் பெற்று வந்து தொடர்ந்து சந்தாவைப் புதுப்பிக்காமல் விட்டவர்கள் இதழ் தொடர சந்தாவைப் புதுப்பிக்கவும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்முக நாடுகளின் கல்வி வீழ்ச்சி - சர்வதேச நாணய நிதியத்தின் எதிர்மறைப் பங்களிப்பு பற்றிய ஆய்வு முடிவுகள்

பல பாடசாலை தாம் விரும்பிய விடயங்களை நிறைவேற்று வதற்குப் பெற்றோர்களை சம்மதிக்க வைப்பதையே குறியாகக் கொண்டு இயங்குகின்றன. பாடசாலை மட்டத்தில் பெற்றோர்களின் பங்களிப்பின்றி தயாரிக்கப்பட்ட திட்டங்களை பெற்றோர்களின் மீது திணித்து அவற்றை செயலாக்கு வதில் பெற்றோர்களின் விருப்பங் களை பெற்றுக்கொள்ளவே பெரும் பாலும் முனைகின்றன என்பது பெற்றோர்களின் குற்றச்சாட்டு களாகும்.

பேரா. சோ. சந்திரசேகரம்
கல்வியியல் துறை
கொழும்புப் பல்கலைக்கழகம்

"கல்வி மக்களுக்கு வழங்கப்படும் சலுகையல்ல ; அவர்களுடைய அடிப்படை மனித உரிமை' என்பது 20 ஆம் நூற்றாண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்று. பிள்ளைகளுக்குத் தரமான கல்வி இலசவமாக வழங்கப்படல் வேண்டும்; உலக நாடுகளின் அரசியல் யாப்புகள் அனைத்திலும் இது காணப்படுகிறன்றது. எவ்வாறாயினும் இவ்விலக்குகளை அடையப் பல நாடுகளால் முடியவில்லை. இதற்குக் காரணம் இந்நாடுகள் தமது கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்துக் கொள்ள முடியவில்லை. சர்வதேச நாணய நிதியம் (IMF, இனி ச.நா.நிதியம்) வகிக்கின்ற பொருளாதாரக் கொள்கைகள் இவ்வாறான அதிகரிப்புக்கு இடந்தருவதில்லை என்பது ஒரு முக்கியமான விடயம். ச.நா. நிதியத்தின் கொள்கைகளுக்கும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்விசார் இலக்குகளுக்கும் (உ-ம்: 5-14 வயதுக்குட்பட்ட யாவருக்கும் கல்வி) இடையே பல முரண்பாடுகள் இருப்பது பற்றிய ஆய்வுகள் இன்று வெளிவந்துள்ளன.

எட்டு நாடுகளில், (இந்தியா, வங்காளதேசம், கமரூன், எத்தியோப்பியா, கென்யா, நைஜீரியா, சியரா லியோன்) ச.நா. நிதியத்தின் கொள்கைகள் காரணமாக, ஆசிரியர்களை நியமிக்க முடியாதுள்ளது; அவர்களுடைய வேலை நிபந்தனைகள், சம்பளங்கள் என்பவற்றையும் இக்கொள்கைகள் பாதித்துள்ளன. ச.நா.நிதியத்தின் ஒரு பிரதான கொள்கை - நிபந்தனையின்படி பணவீக்கமானது 5 சதவீதத்துக்கு மேல் இருக்கக்கூடாது. பொருளாதார ஆய்வு நூல்களில் இப்படி எதுவும் கூறப்படவில்லை என ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். வளர்முகநாடுகள் தமது கல்விச் செலவை மாணவர் நன்மை கருதி அதிகரிக்கும் போது, பணவீக்கம் அதிகரிக்கும் என நிதியம் கருதுகின்றது. இலங்கை போன்ற நாடுகளில் ஆசிரியர்களின் சம்பளங்கள் கூட்டப்படாமைக்கு இப்பணவீக்கக் கொள்கை ஒரு பிரதான காரணமாகும்.

ச.நா. நிதியத்தின் வற்புறுத்தலின் பேரில் வளர்முகநாடுகள் ஆசிரியர் சம்பளங்களைக் குறைப்பதன் மூலம் / உரிய அதிகரிப்புகளை வழங்காது விடுவதன் மூலம் சேமிப்புக்களைச் செய்ய முயலுகின்றன. பலவழி முறைகளை வளர்முக நாடுகள் கையாளுகின்றன.

1. ஆசிரியர்கள் தொகையைக் கட்டுப்படுத்தல், கென்யா நாட்டிற்கு 60,000 புதிய ஆசிரியர்கள் தேவை ; ஆனால் அந்நாட்டில் 1998 இல் இருந்த மொத்த ஆசிரியர் தொகையே இன்றும் பேணப்பட்டு வருகிறது. நேபாளத்தில் புதிதாக 2 இலட்சம் மாணவர்கள் சேர உள்ளனர்; ஆனால் 2009 வரை புதிய ஆசிரியர்களை நியமிக்கக்கூடாது என்ற கட்டுப்பாடு உண்டு. இலங்கையில் 2003 ஆம் ஆண்டளவில் அரசசேவைகளில் ஆட்களைச் சேர்ப்பதில் இவ்வாறான கட்டுப்பாட்டை அரசாங்கம் விதித்திருந்தது.

2. ஆசிரியர்களின் சம்பளங்களைக் கட்டுப்படுத்தல் (Freezing): ஆசிரியர்கள் சாதாரண வாழ்க்கையை வாழ முடியாத நிலைமைக்குக் கொண்டு வந்த இத்திட்டம் காரணமாக, கானா, எத்தியோப்பியா, பங்களாதேசம் ஆகிய நாடுகளின் ஆசிரியர்கள் பலர், வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை நாடினர். சியராலியோன் நாடு தனது கல்விச் செலவை மொத்த தேசிய உற்பத்தியின் 8.4% இருந்து, 2008 இல் 5.8% ஆகக் குறைக்க ஒப்புக் கொண்டுள்ளது.

3. குறுங்கால ஒப்பந்த அடிப்படையில் 'ஒப்பந்த ஆசிரியர்களை நியமித்தல்' மேலதிக நன்மைகளில்லாமல் குறைந்த சம்பளங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு வருடங்களுக்கு ஆசிரியர்களை நியமிக்கும் ஏற்பாடு நைஜீரியாவில் பின்பற்றப்படுகின்றது.

4. ஆசிரியர் தொழில் பயிற்சியற்றவர்களை 30 சதவீத சம்பளத்துக்கு நியமித்தல்: இவர்கள் முறையான ஆசிரியர் கல்வித்தகுதிகள் எதுவும் இல்லாதவர்கள் ; இவ்வாறான இரண்டு இலட்சம் ஆசிரியர்கள் தற்போது இந்தியாவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தொழில்தகுதி அற்றவர்கள் நியமிக்கப்படுவதால், ஆசிரியர்களின் அந்தஸ்து குறைவதோடு, தொழிற்சங்கங்களின் பேரம் பேசும் பலமும் குறைந்து விடுவதாகக் கூறப்படுகின்றது; இவ்வாறான ஆசிரியர்கள் தொழிற்சங்கங்களை அமைப்பதிலும் தடைகள் உண்டு.

ச.நா. நிதியம் விதிக்கும் வர்த்தக தாராளமயக் கொள்கைகளும் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டில் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. இதனால் இறக்குமதித் தீர்வைகள் குறைந்து அரச வருமானம் பாதிப்படைகின்றது. அரசாங்க வருமானங்களின் வீழ்ச்சி காரணமாக, கல்விக்கான நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்படுகின்றன. பல நாடுகள் ஆரம்பக் கல்வி நிலையிலும் கல்விக் கட்டணங்களை விதிக்க ஆரம்பித்துள்ளன. 92 நாடுகளில் விதிக்கப்பட்ட இவ்வாறான கட்டணங்கள் காரணமாக ஏராளமான மாணவர்கள் பாடசாலைகளுக்கு வருவதில்லை. வறிய நாடுகள் ச.நா. நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால் மட்டுமே உதவிகளையும் கடன்களையும் பெறமுடியும் என்பதால் இவ்வாறு கல்விக்கட்டணங்கள் விதிக்கப்படுகின்றன.

இப்பின்புலத்தில் நோக்குமிடத்து வளர்முக நாடுகளின் கல்விக் கொள்கைகள் தேசிய கல்வி இலக்குகளின் அடிப்படையில் அல்லாது ச.நா நிதியத்தின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட வேண்டி உள்ளது.

**கல்வி மக்களுக்கு வழங்கப்படும் சலுகையல்ல' அவர்களுடைய அடிப்படை மனித உரிமை' என்பது 20ம் நூற்றாண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்று. பிள்ளைகளுக்குத் தரமான கல்வி இலசவமாக வழங்கப்படல் வேண்டும்' உலக நாடுகளின் அரசியல் யாப்புகள் அனைத்திலும் இது காணப்படுகிறன்றது. எவ்வாறாயினும் இவ்விலக்குகளை அடையப் பல நாடுகளால் முடியவில்லை. இதற்குக் காரணம் இந்நாடுகள் தமது கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்துக் கொள்ள முடியவில்லை.**

கல்வி ஒரு அடிப்படை உரிமையாயினும் நிதி ஒதுக்கீடுகளில் அவ்வுரிமை பிரதிபலிக்கப்படுவதில்லை.

ச.நா. நிதியத்துக்கும் மத்திய வங்கிஅல்லது நிதி அமைச்சுக்கிடையிலான ஒப்பந்தங்கள் பாராளுமன்றத்தில் சரியாகக் கலந்துரையாடப்படுவதில்லை ; இதனால் ஜனநாயக ஆளுமை பாதிக்கப்படுகின்றது என்ற முறைப்பாடும் உண்டு.

இவையாவும் ஒன்றிணைந்து கல்வியை வழங்குவதில் அரசாங்கத்துக்குரிய பொறுப்பையும் பங்கையும் பாதிக்கின்றன. வறுமையைக் குறைக்க வேண்டும்; மில்லேனியம் அபிவிருத்தி இலக்குகளை அடைய வேண்டும் என்ற சர்வதேச நிர்ப்பந்தம் உண்டு; அதே வேளையில் பொது நலசேவைகளில் முதலீட்டை அதிகரிப்பதில் சர்வதேச நிதி நிறுவனங்கள் விதிக்கும் தடைகளும் உண்டு.

இப்பிரச்சினை தொடர்பாகக் கூறப்படும் ஆலோசனைகள்:

1. ச.நா. நிதியத்துடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தும் போது நாட்டில் விரிவான பொதுக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்தல் ;
2. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ச.நா. நிதிய நிபந்தனைகளைப் பரிசீலனை செய்யப் பயிற்சி வழங்குதல்;
3. கல்விக்கான புதிய உதவிகளை நாடுதல் ; அவை அதிமிஞ்சிய பணவீக்கத்தக்கு வழிகோலும் என்ற கருத்தை மறுதலித்தல்;
4. கல்வி ஒரு சிறந்த முதலீடு; இதனால் நீண்ட காலத்தில் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்பதை உணர்த்துதல்.

**ஆதாரம் : Education Action ஜனவரி — 2006**

---

ஒருவர் அறிந்திருப்பதை ஒருவர் அறிந்திருக்கிறார் என்பதை அறிந்து கொள்வதும், ஒருவர் அறிந்திராததை ஒருவரும் அறிந்திருக்கவில்லை என்பதை அறிந்து கொள்வதும் தான் உண்மையான அறிவியல்

கன்ஃபூசியஸ்
-சீனத் தத்துவஞானி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதியுயர் வினைத்திறன் மிக்கவர்களின் ஏழு குணாதிசயங்கள்

1. எப்பொழுதும் வினைதிறன் உடையவர்கள் தனது சூழலைக் கட்டுப்படுத்தும் திறன் உடையவர்கள். சுயவிளக்கம், சுயவலிமை, பிரச்சினைகளைச் சுயமாக தீர்க்கும் திறன்.
2. முடிவுகள் பற்றி தீர்மானத்துடன் செயற்பாடுகளை ஆரம்பிப்பவர்கள்.

   உயர்வான இலக்குகள்

   அபிவிருத்திச் செயற்பாடுகள்

   தடைகளைத் தகர்த்தெறிந்து விளைவை நோக்கி நடைபோடுபவர்கள்
3. முதல் செய்ய வேண்டியவற்றை முதல் செய்பவர்கள். படிமுறையாக செயற்பாடுகளை வகுத்து தொழிற்படுபவர்கள். உளரீதியான உருவாக்கத்திலிருந்து உடல்ரீதியான உருவாக்கத்திற்கு செல்பவர்கள்.
4. வெற்றி- வெற்றி சிந்தனை உடையவர்கள், தொடர்பாடல், பங்குபற்றல் மூலம் நாமும் வெற்றியடைந்து மற்றவரையும் வெற்றியடையச் செய்பவர்கள்.
5. தாம் முதலில் விளங்கிப் பின்னர் மற்றவரை விளக்கமுறச் செய்பவர்கள்.

   தான் ஆய்வு செய்து அதனை விளங்கி பின்னர் மற்றவர்களுக்கு விளக்கமுனைவர் .
6. எல்லா வகையான தொடர்புகளையும் வெற்றிகரமாக ஒன்றிணைப்பதில் வல்லவர்கள்.
7. நுணுக்கமான முறையில் மற்றவர்களை உற்சாகமூட்டி தனது இலக்குகளை வெற்றி-கரமாக அடைந்து கொள்பவர்கள்.

*(Dr. Stephen Covey)*

மொழிபெயர்ப்பு: கா.சுவர்ணராஜா


**....**கற்பிக்கும் மொழியில் ஆசிரியருக்கு உள்ள திறமை மிக முக்கியமான இயல்பாகும். இத்திறமையை நான்கு மொழித் திறன்களின் அடிப்படையில் நாம் எடை போடலாம். பொதுவாக மாணவர்கள் பலருக்குப் பேசுந்திறனும், கேட்கும் திறனும் மட்டுமே வேண்டியிருக்கலாம். வேறு பலருக்குத் தங்கள் தொழிலின் அடிப்படையில் படிக்கும் திறனும் எழுதும் திறனும் மட்டுமே வேண்டியிருக்கலாம். இவ்வாறு நாம் திறன்களைப் பாகுபடுத்தி அந்தந்த மாணவருக்கு வேண்டிய திறன்களை மட்டும் கற்பிக்க முடியும் என்றாலும் ஆசிரியருக்கோ இந்நான்கு திறன்களிலும் நல்ல திறமை இருக்க வேண்டும். அவருடைய மொழியறிவு நன்றாக அமையுமானால் அவரிடம் கற்றுக் கொள்ளும் மாணவருக்கு ஒரு தன்னம்பிக்கை ஏற்படும். அதைப் போலவே அம்மாணவர்களுக்கு ஏற்படும் ஐயங்களையும் இடர்ப்பாடுகளையும் தீர்ப்பதற்கு ஆசிரியருக்கு மொழியறிவு மிகவும் உதவியாய் இருக்கும். மேலும், எவ்வளவோ கருவிகளைக் கொண்டு மொழியைக் கற்பித்தாலும் வகுப்பறையிலும் சரி, வகுப்புக்கு வெளியேயும் சரி ஆசிரியரே மாணவர்களுக்கு முன்மாதிரியாக இருப்பார். அவர் பேசும் விதம், அவர் கேள்வி கேட்கும் விதம், அவர் எழுதும் விதம், அவர் உரக்கவாசிக்கும் விதம் எல்லாம் மாணவர்களின் மொழி கற்கும் செயலில் மிகவும் செல்வாக்கு பெறும். கற்கும் செயலில் மிகவும் செல்வாக்கு பெறும். ஆகையால் ஆசிரியருக்குத் தான் கற்பிக்கும் மொழியிலிருக்கும் திறமை மிகவும் முக்கியமானதாகி விடுகிறது**....**

டாக்டர் மா.சு.திருமலை

தமிழ் கற்பித்தல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகவிழியின் புதிய வரவாக வெளிவந்து விட்டது




# கல்வியில் புதிய சீர்திருத்தங்கள்

## ஒரு விளக்க நிலை நோக்கு

கலாநிதி சபா. ஜெயராசா
(பேராசிரியர், கல்வியியல் துறை.
யாழ். பல்கலைக்கழகம்)

**விலை : ரூபா . 50.00**

தொடர்புகட்கு

அகவிழி

**AHAVILI,**
*3, Torrington Avenue, Colombo - 07*
*Tel : 011-2506272*
*E.mail : ahavili@viluthu.org*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்து விட்டது...

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

விலை ரூபா 350.00




## முதலாம் ஆண்டுத் தொகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org